112

112

புதுக்கவி விட்மன்

(POET WALT WHITMAN)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 JAN 1943
MADRAS

யோகி ஶ்ரீ சுத்தானந்த பாரதியார்

புதுக்கவி விட்மன்

(POET WALT WHITMAN)

முதற் பதிப்பு: டிஸம்பர் 1942

உரிமை பதிவுற்றது

கார்டு போர்டு விலை ரூ. 1—8—0

புதுக்கவி விட்மன்

புதுக்கவி விட்மன்

(Poet Walt Whitman)

[வரலாறும், திருவாக்கும்]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 JAN 1943
MADRAS

928.21

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம் :: திருச்சி ஜில்லா

1942

POET WALT WHITMAN

(His Life and Works)

0111, J, 1w

Published by :

ANBU NILAYAM

Ramachandrapuram :: Trichy Dist.

Printers : Shakti Press Ltd., Karaikudi.

பதிப்புரை

வால்ட் விட்மன், புதுக்கவி; புரட்சிக் கவி; உலகிற்குப் பல புதிய எண்ணங்களைத் தந்தவன். அவன் வாழ்வும், வாக்கும், மறுமலர்ச்சித் தமிழருக்குப் புதிய ஊக்கமளிக்கும். ஆதலால், **புதுக்கவி விட்மனை,** எமது பெரியார் தொகுதியின் நான்காவது அன்பு மலராக வெளியிடுகின்றோம். இந்நூலில், விட்மனைப் பற்றியுள்ள எல்லா விவரங்களும், அவனுடைய **"புல்லிதழ்கள்"** (**Leaves of Grass**), **"ஜனநாயகக் காட்சி"** (**Democratic Vistas**) **"மாதிரி நாட்கள்"** (**Specimen Days In America**), முதலிய நூன் மணிகளும் அடங்கியுள்ளன.

இந்நூலில், ஆசிரியர் **யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள்,** ஆங்கில மூலத்துடன், விட்மன் திருவாக்குகளைத் தமிழாக்கித் தந்துள்ளார்கள். மூலத்தின் உயிர், மொழிபெயர்ப்பில் பொலிகிறது. விட்மனின் உண்மைக் கவியுள்ளத்தை அறிய, அகராதிப்புலமை மட்டும் போதாது: உள்ளாழ்ந்த ஆத்ம தரிசனமும், சுதந்தர உணர்வும் வேண்டும்.

இந்நூலை மிகவும் பாராட்டி முன்னுரையளித்த பெரும் புலவர் **இராவ்ஸாஹெப் திரு. S. R. ரெங்கநாதன் அவர்கள், M.A., L.T., F.L.A.,** ஆவார். அவர் சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தின் அமைச்சராயிருந்து அரிய அறிவுத் தொண்டு செய்பவர்; உண்மையான தமிழார்வங் கொண்டவர். இப்பெரியாருக்கு எமது நன்றியுள்ள வணக்கம்.

இறைவன் அருளாலும், பெரியார் அன்பாலும், எம் அருட்பணி மேன்மேலும் செழித்தோங்கித் தமிழருக்குப் பயனுகுக!

இராமச்சந்திரபுரம்,
24—12—1942.

அன்பு நிலயத்தார்.

௱௯—௧—௪௰௨

FOREWORD

BY

RAO SAHIB S. R. RANGANATHAN, M.A., L.T., F.L.A.

(Librarian, Madras University Library)

THERE are persons whose soul (Jeevatma) realises, at moments, its identity with the supreme spirit (Paramatma). We have the testimony of Wordsworth to say, that a person in such a state is 'laid asleep in body'. If such "a superior man gain an insight into the secret operations of Nature", says Goethe, "the language which has been handed down to him is not sufficient to express anything so remote from human affairs. He ought to have at command the language of spirits to express adequately his peculiar perceptions". As it is not so, many such persons have no alternative but to melt into silence. Some,

however, manage to express themselves while receding from such a state of identity. If the medium used is the human language, poetry emanates; otherwise, some other form of art. There is nothing in the recorded heritage of man of greater value than such nascent words.

We have the closest known approach to ideal poetry in the **Ramayana of Valmiki**, the premier poet. Endless is the variety of the import of its verses yielding to each a meaning in the exact measure of his power to assimilate. The verbal economy is perfect—no chapter, no verse, nay, no word is superfluous. The form is exquisite and faultless. "The words and the sense cohere," says Kalidasa, "as Parvathi and Parameswara". This is at one extreme. We have at the other, nonsensical rhymes like:

"Hey diddle, diddle, the cat and the fiddle;
The cow jumped over the moon;
The little dog laughed to see such sport;
And the dish ran away with the spoon."

There are endless grades of poetry between these two extremes. It is no easy task to find Whitman's position in the scale.

He wrote profusely; and naturally, the quality is not uniform. Swami Shuddhananda Bharatiar has gathered in this volume, such passages of Whitman as translate the inner meanings of nature and life into language of distinction and charm. He has also set these passages with a background of inner biography and critical estimate.

The learned Swamiji has done more than selecting and interpreting. He has made our mother-tongue the medium not only for his own words, but also for those of Whitman. He has already introduced to us, in a similar manner, Dante, Emerson, Francis Thompson, Racine, Victor Hugo, Tagore, Aurobindo, Kamban, and Kalidasa; Shakespeare, Homer, Milton, Moliere, Goethe, Byron, Shelley, Blake, Goldsmith and Wordsworth have been promised, and are already in manuscript. In the present state of our mother tongue, the service he is thus doing to Tamil, almost overshadows his service to Tamilian readers.

During the last three centuries, Tamil has been paralysed beyond measure along with the other Indian languages by the yoking of the upper-most centiles of the community to

an alien tongue. To the productive talent and thereby to the mother-tongue, this adoption of the alien tongue has acted, to borrow Goethe's words, as "a noxious mist, a dropping poison, which destroys the tree of creative power—from the ornamental green leaves, to the deepest pith and the most hidden fibres."

In "Winged Destiny", Fiana Macleod feels this problem of foreign medium and suppression of mother-tongue in the following manner:

> "There is no path to the heart save through the mother-tongue. The mother-tongue! That in which the mother croons lullabies over the cradle, that in which the infant learns to lisp, that in which he first learns to pray at his mother's knee, that in which he jokes and plays with his fellows, that in which the youth whispers words of love into his sweetheart's ears, that which enters into all the most sacred memories of a man's life! The mother-tongue —the music of the hearth and home!—it is the key which unlocks the door of a people's heart.

> "The last tragedy for broken nations is not the loss of power and distinction, nor even the loss of that independence which is so vital

to the commonweal. It is not perhaps even the loss of the country, though there is no harder thing than to see the smoke of the stranger, or to hear upon the wind the forlorn business of the going of those who are dispossessed and the coming of those new in possession. The last tragedy, and the saddest, is when the treasured language dies slowly out.

"The whole tendency in our modern days is for the stronger nations to overwhelm the weaker, to annihilate their culture, to swamp their language. This makes not for the enrichment but for the impoverishment of humanity. Losing its native speech, a people loses its continuity with the past and sinks to intellectual helotry."

But let us not be pessimistic with Macleod; for there is every sign of global upheaval and renaissance in every sphere of thought. Tamil, along with its sister languages, has begun to recover. It is true that during the centuries of its suspended animation, human thought has surged forward at an incredible rate. But the resilience of Tamil is great enough to bring it abreast of times. Attempts at resuscitation through Terms Committees imply, however, a partial and futile view, and dissipate effort into a

controversy which has its real root elsewhere. It is putting the cart before the horse; for grammar (**Lakshna Grantha**) including creation of words, as a rule, follows exposition and literature (**Lakshya Grantha**). The only sure and enduring method is for those who have ideas, to speak them out with such terms as get involuntarily improvised under the urge for expression. It is only such words that are natural-borns. It is only they that will have an enduring quality and the quality of not being obstructive. The time for picking and choosing, purifying and stabilising will come long after a number of such writings have accumulated. Monetary probes are being used by the Universities of the land and the head of Thiruppanandal Mutt to stimulate the urge for expression in Tamil in those in whom it lies dormant.

The writings of Swami Shuddhananda Bharatiar are, on the other hand, spontaneous. He knows many languages; and he is a poet. He has disciplined himself althrough life for disinterested service. It is fortunate that he has been chosen by Mother India for reviving and enriching Tamil in a natural and self-directed way. It is a good augury that a patriotic

and disinterested association like ANBU NILAYAM has come into existence to embody his thoughts in book form. The Swamiji is a prolific writer. He wields a facile pen. There is every evidence, for example, of this book having been poured out at once. It gives it an advantage.

Let me conclude by expressing the gratefulness of the Tamil Community to Sri Swami Shuddhananda Bharatiar.

Madras University Library
21—11—1942 } **S. R. Ranganathan**

முன்னுரை

இராவ் சாஹெப்

திரு. எஸ். ஆர். ரெங்கநாதன் அவர்கள், M.A., L.T., F.L.A.

(சென்னைப் பல்கலைக் கழக நூலக அமைச்சர்)

ஜீவாத்ம-பரமாத்ம ஐக்யத்தை உணர்ந்த மகான்கள் இருக்கிறார்கள். அந்த நிலையடைந் தவர், 'உடலுள் சமாதியுறக்கங் கொள்வர்' என்று வேட்ஸ்வொர்த் அத்தாட்சி கூறுகிறார். "அத்தகைய மகான் ஒருவர், இயற்கையின் அந்தரங்கத்தை ஊடுருவிப் பார்க்கும்போது, தமக்கு அனுபவமாகும் அமானுஷ்யமான செயல்களை வருணிக்க, சாதாரணமாக வழங் கும் பாஷை போதாது. அவரது அற்புதக் காட்சிகளைத் தெளிவாக விளக்கத் தெய்வ பாஷை வேண்டும்" என்று ஜெர்மன் கவியர சர் கெத்தே சொல்லுகிறார். அஃதில்லாததால், மகான்கள் பலர் மௌனத்தில் தம்மை யிழந்து

விடுகிறார்கள். எனினும் சிலர், சமாதிநிலை கலைந்தகாலை, தம் அனுபவங்களைச் சொல்லால் விளக்க வல்லவர்களா யிருக்கிறார்கள்: அவர், மானிடபாஷையில் விளக்கினால், அது கவியாக முகிழ்க்கிறது; இன்றேல், அது வேறுசில கலையாகிவிடும். மனித பரம்பரையில், இவ்வா றுதித்த அருள்வாக்குகளினும் சிறந்த வேறு இலக்கியச் செல்வமே கிடையாது.

ஆதிகவி வால்மீகியின் இராமாயணம், நமக்கு ஆதர்ச கவியாக விளங்குகிறது. அதன் செய்யுட்கள், அள்ள அள்ளக் கொள்ளுமட்டும் கொடுக்கும் பொருட் செறிவுள்ளன; அதன் மொழிச் சிக்கனம் நிறைவானது. அதில் எந்த ஸர்க்கமும், சுலோகமும்,—ஏன், ஒரு வார்த்தைகூட — மிகையில்லை. அதன் ரசனை அதிரம்யமானது, அப்பழுக்கற்றது. "வாக்கும் அர்த்தமும், பார்வதி - பரமேசர்போல் ஒன்றை ஒன்று தழுவுகின்றன" என்று காளிதாஸன் சொல்லுகிறான். இந்த உன்னதநிலை ஒரு புறம்; மற்றொருபுறமோ,

"ஹே டிடில், டிடில், பூனையுடன் பிடில்;
சந்திரனைத் தாவியது பசு;
இவ்வாடலைக் கண்ட நாய்க்குட்டி சிரித்தது;
கரண்டியுடன் தட்டு ஓடியது"

என்ற காமா சோமாக் கவிகள் உள்ளன!

இந்த இரண்டு நிலைகளுக்குமிடையே எத்தனையோ கவிதைப் படிகள் உள்ளன. இப் படியேற்றத்தில், விட்மனின் கவிதா ஸ்தானத்தை நிர்ணயித்தல் எளிதன்று. அவன் ஏராளமாகக் கவிகள் எழுதினான்; ஆதலால், அவன் கவிநயம் ஒரே மேனியாயில்லை. இந் நூலில் ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள், இயற்கை, வாழ்க்கை - இவ்விரண்டின் உட் பொருளை விளக்கும் விட்மன் வாக்குகளைத் திரட்டித் தமது கம்பீரமான, மதுரசரள வாக்கில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்கள். விட்மனின் உள்வரலாறு, கவிதா விமர்ஸனம் இரண்டையும், அவ்வாக்குகளுக்குப் பின்னணியாக அவர்கள் பொருத்திக் காட்டுகிறார்கள்.

கவிகளைத் தேர்ந்து விளக்கியது மட்டுமன்று; நம் தாய்மொழியை, தம் வாக்குகளுக்கு மட்டுமன்றி, விட்மன் திருவாக்குகளுக்கும் அவர்கள் ஓர் அரிய சாதனமாக்கி யிருக்கிறார்கள். முன்பே, அவர்கள் நமக்கு தாந்தே, **எமர்ஸன், பிரான்ஸிஸ் தாம்ஸன், ராஸீன், விக்தர் ஹியூகோ, கம்பன், காளிதாஸன், தாகூர், அரவிந்தர்** முதலிய மகாகவிகளை இதேமாதிரி அறிமுகப் படுத்தி யிருக்கிறார்கள்; இப்போது, **ஷேக்ஸ்பியர், ஹோமர், மில்தன், மோலியர், கெத்தே, பைரன், ஷெல்லி, பிளேக், கோல்டுஸ்மித், வேட்ஸ்வொர்த்** ஆகிய புலவர்மணிகளைப்பற்றி ஆராய்ச்சி எழுதி

முடித்திருக்கிறார்கள்; அவை, கைப்பிரதியா யுள்ளன. நமது தாய்மொழி இன்றிருக்கும் நிலையில், சுவாமிகள் தமிழ் மொழிக்காகச் செய்துவரும் அருட்பணி, தமிழ்வாசகர்களுக்காக அவர்கள் ஆற்றிவரும் பணிகளையெல்லாம் மிஞ்சி விட்டன!

படித்த மேதாவிகள் அன்னியமொழிக்கே ஆளாகி வந்தமையால், சென்ற மூன்று நூற்றுண்டுகளாகத் தமிழும், மற்ற இந்திய மொழிகளும் வளர்ச்சியற்றிருக்கின்றன. இவ்வாறான அன்னியமொழிப் பற்று, கவியரசர் கெத்தே சொல்லுகிறபடியே, "அலங்காரமான பசும் இலைகள் முதல், உள்ளாழ்ந்த சத்து நரம்புகள் வரையும் உறிஞ்சி, மரத்தின் ஆக்கத்தையே கெடுக்கும் கடும்பனிபோலும், நஞ்சூட்டம் போலும், தாய்மொழியின் வளர்ச்சியாற்றலை அழித்துவிட்டது."

பிறமொழி ஆக்கத்தால் தாய்மொழி அழிவதை, "பறக்கும் விதி" (Winged Destiny) என்ற நூலில் ஃபியானு மெக்லியேடு (Fiana Macleod) பின்வருமாறு சொல்லுகிறார்:

"ஒருவர் தாய்மொழியே உள்ளத்தைத் தொடும் மார்க்கம்....தாய்மொழி! தாய் மொழியிலேதான், அன்னை குழந்தையைத் தாலாட்டுகிருள்; குழந்தை மழலை

பேசுகிறது; தாயுடன் தாள்பணிந்து கடவுள் வணக்கம் செய்கிறது. தாய்மொழியிலேதான், பையன் தோழருடன் வேடிக்கை விளையாட்டு நடத்துகிருன். தாய்மொழியிலேதான், வாலிபன் காதலியுடன் காதல் ரகசியம் பேசுகிருன். அதுவே, மனிதர் வாழ்வின் புனித நினைப்புகளிலெல்லாம் புகுந்து பரவுகிறது. தாய்மொழி!—அதுவே மனைவாழ்வின் மங்கல கீதமாகும்!—அதுவே மக்களின் உள்ளத்தைத் திறக்கும் சாவியாகும்!

"ஒரு சமுதாயத்தின் கடைசி அவகேடு, அதிகாரம் பெருமை இவற்றை இழப்பதன்று; பொதுநல வாழ்விற்கு அவசியமான சுதந்தரத்தை இழப்பதுகூட அன்று: தனது நாட்டில் அன்னியன் புகை படர்வது, அல்லது, சுதேசிகள் பதமிழந்து அனுதைகளாக அலறியோடுவது, புதியவர்கள் ஆக்கஞ் செலுத்துவது ஆகிய அலங்கோலக் காட்சிகள் மிகக் கொடுமையானவையே. இவ்வாறு நாடு இழப்பதுகூட ஒரு பொருட்டன்று; தாய்மொழிச் செல்வம் மெல்ல மெல்ல அழிவதே, இறுதியான பெருந்துயர நாடகமாகும்.

"வல்லரசுகள், மெலிந்தவரை அடக்கி, அவர்கள் கலாசாரங்களை அழித்து, தாய்மொழியை அடியோடு கவிழ்த்தலே, இக்கால மனப்பான்மையா யிருக்கிறது. இதனுல், மனித

சமுதாயம் செழிப்படையாமல், வறட்சி யடைகிறது. தாய்மொழியை இழந்த ஒரு சமுதாயம், தனது பண்டைத்தொடர் பற்று, அடிமைப் புத்தி பிடித்துக் கெடு கிறது."

ஆனல், நாம் மெக்லியடைப் போல அவ் வளவு தின்மைவாதியா யிருக்கவேண்டா. ஏனெனில், ஒவ்வொரு சிந்தனை மண்டலத்தி லும், பரிபூரண எழுச்சியும், புதுமலர்ச்சியும் உண்டாகும் அறிகுறிகளைக் காண்கிறோம். தமிழ், தன் இனமொழிகளுடன் தலைதூக்கி யிருக்கிறது. அது செயலற்றுறங்கிய நூற் ருண்டுகளில், மனித யுக்திகள் அதிவேகமாக முன்னேறிவிட்டமை உண்மையே. ஆனல், இப் போது தமிழ் பாய்ந்து செல்லும் வேகத்தில், காலத்திற்குத் தக்கவாறு ஈடேறிவிடும். கலைச் சொல்லாக்கக் குழுவின் சிதறிய முயற்சிமட் டுமே தமிழை முன்னேற்றிவிடுமென்று வாதாடு வது பொருந்தாது. அது, குதிரைக்குமுன் வண்டியைப் பூட்டுவதை யொக்கும். ஏனெனில், இலக்கியங் கண்டதற்கே, (சொல்லாக்கம் உள் பட) இலக்கணஞ் செய்தல் மரபாகும். கருத் திருப்பவர்கள் அவற்றை விளக்கும் வேகத்தி லேயே சொல்லாக்கி, வழக்கத்திற்கு வரும்படி பேசவேண்டும்; எழுதவேண்டும். அத்தகைய சொற்களே, இயற்கையாகப் பிறந்தவை. அவையே, தடைசெய்யாமல், நிலைத்து வழங்கி

வரும் தன்மையன. அவ்வாறு பல நூல்கள் ஏற்பட்ட பிறகே, சொற்களைப் புடைத்தெடுத்துத் தேர்ந்து, மாசகற்றி நிர்ணயித்தல் கூடும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகத்தாரும், திருப்பனந்தாள் பண்டாரசந்நதிகளும் இப்போது பணங்கொடுத்து, தகுந்த எழுத்தாளர்கள் மூலம் தமிழ்நடையைத் தீவிரமாகத் தூண்ட முயலுகின்றனர்.

ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்களின் நூல்களோ, உள்ளெழுச்சியால் சரளமாக வருபவை. அவர், பன்மொழிப் பேரறிஞர்; எனினும், அவர் அருட்கவியாவர். ஆயுளெல்லாம், நிஷ்காம்யகர்ம யோகத்தையே, அவர் சாதகமாகக் கொண்டவர். இயற்கையாகத் தன் அருள்வழிபற்றித் தமிழை வளர்க்கவே, இந்தியத்தாய் அவரைத் தேர்ந்தெடுத்திருப்பது பெரும் பேருகும். தாய்நாட்டன்பும், தியாக புத்தியுமுள்ள அன்பு நிலயத்தார் அவரது எண்ணங்களை நூல்வடிவாக வெளியிட்டு வருவதும் ஒரு நற்செயலே. சுவாமிகள் அபாரமான எழுத்தாளர்; அவர் நடை, மிகவும் சரளமானது. அவர் நூல்கள், ஒரே மூச்சில் பொங்கித் ததும்பிக்கொட்டுபவை என்பதற்கு, இப்புத்தகமே போதிய சான்ருகும். அவரது ஆவேசநடையழகு இந்நூலுக்கே ஒரு சோலையைத் தருகிறது.

ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்களுக்குத் தமிழ் மரபினரின் நன்றியைத் தெரிவித்து, நான் இம்முன்னுரையை முடிக்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழக நூலகம்
21—11—1942

எஸ். ஆர். ரெங்கநாதன்

துணை நூல்கள்

BIBLIOGRAPHY

1. Walt Whitman as Poet & Person
—*John Burroughs*

2. The Good Grey Poet—A Vindication
—*W. D. O'Connor*

3. Autobiographia ...
—*J. Addington Symonds*

4. Walt Whitman (Edited by)
—*H. L. Traubel*
—*R. M. Bucke &*
—*T. B. Harned*

5. Reminiscences ...
—*W. S. Kennedy*

6. The Wound Dresser (Letters written from the Hospitals in Washington)
—*R. M. Bucks*

7. Walt Whitman's Diary in Canada
—*W. S. Kennedy*

8. With Walt Whitman in Camden
—*H. L. Traubel*

9. Life ...
—*H. B. Binns*

10. Walt Whitman ...
—*Basil de Selincourt*

11. The Letters of Anne Gilchrist and Walt Whitman
—*T. B. Harned*

12. Walt Whitman ...
—*John Bailey*

13. Whitman ...
—*Emery Holloway*

14. Whitman's LEAVES OF GRASS (Ed. by)
—*Harned & Traubel*

15. Walt Whitman's Pose
—*Miss Esther Shephard*

16. Defence of Poetry
—*P. B. Shelley*

பொருளடக்கம்

		பக்கம்
	பதிப்புரை	7
	FOREWORD	9
	முன்னுரை	17
	துணை நூல்கள்	25
I.	**புதுக்கவி விட்மன் (வரலாறு):**	
1.	புரட்சிக் கவி	*31*
2.	நல்ல கவிக் கிழவர்	*38*
3.	ஏழைக் குடும்பம்	*41*
4.	இயற் புலமை	*44*
5.	அச்சுத் தொழிலாளி	*47*
6.	இதழாசிரியன்	*50*
7.	சுதந்தரக் கவி	*52*
8.	விட்மன் நண்பர்கள்	*55*
9.	"கொள்கையே பெரிது!"	*59*
10.	புல் விதழ்கள் (**Leaves of Grass**)	*62*
11.	வசை யம்புகள்	*63*
12.	எமர்ஸன் பாராட்டு	*65*
13.	விட்மன் உபதேசம்	*68*
14.	சுதந்தர வுணர்ச்சி	*70*
15.	கருணை வள்ளல்	*73*
16.	அன்புத் தொண்டு	*75*

17. "போ வெளியே!" 78
18. ஜில்க்ரிஸ்ட் (Anne Gilchrist) 80
19. புதிய சக்திவாணன் 85
20. ஜனநாயகம் வேண்டும் 90
21. மாதிரி நாட்கள் 92
22. எனது பாடல் 104

II. விட்மன் மணிவாசகங்கள் :

23. (Gleanings from 'Leaves of Grass', 'Democratic Vistas', and 'Specimen Days In America') 119

I. Swinburne on Walt Whitman

" O Strong-winged soul with prophetic
Lips hot with blood-beats of songs,
With tremor of heart-strings magnetic,
With thoughts as thunders in throngs,
With constant ardours-chords
That pierce men's souls as with swords,
And hale them hearing along......"

... ...

சூடான இசைக்குருதி துடிக்கும்
தீர்க்க தரிசன வாக்குகள்,
காந்த அதிர்ச்சி கொண்ட
இதயத் தந்திகள்,
இடிக்குழாம் போன்ற எண்ணங்கள்,
வாட்களைப்போல் மாந்தர் உளங்களை
ஊடுருவி, கவனத்தை இழுக்கும்
ஓயாத உற்சாகப் பண்கள் —
இவற்றுடன்
வேகச்சிறகடிக்கும் ஜீவனே !

—விட்மனைப்பற்றி ஸ்வின்பர்ன் பாடியது.

II. ONE WHITMAN

" There is only one Walt Whitman, one American poet who comes home to us with that deep, moving, shaking impact of personality, with a certain density, weight, richness and poignancy."

—Van Wyck Brooks (From " Our Poets")

ஒரே ஒரு விட்மன் !

ஒரே ஒரு விட்மனே உண்டு: ஆழம், உருக்கம், கவர்ச்சிமிக்க தோற்றங்களோடு, திண்மையும் செறிவும், சீர்மையும் கூர்மையும் கொண்டு, நம் உளத்தைத் தொடும் அமெரிக்கக் கவி, ஒரே ஒருவனே உண்டு—(வான் விக் ப்ருக்ஸ்.)

புதுக்கவி விட்மன்

(POET WALT WHITMAN)

1. புரட்சிக் கவி

கவிதை என்றால், எதுகை யிருக்கிறதா, மோனை யிருக்கிறதா, தளை சரியா யிருக்கிறதா என யாப்பிலக்கணம் வைத்து அளந்து பார்ப்பது எங்கும் வழக்கம். *'கார் கொண்ட, சீர் கொண்ட, ஏர்கொண்ட, தார் கொண்ட' என வந்துவிட்டால், 'ஆஹா!' என்பர் காரிகைப் புலவர். வெள்ளைக்காரர் நாட்டிலும், பல நூற்றாண்டுகளாக இதே வழக்கந்தான் இருந்துவந்தது. ஐரோப்பியக் கவிகள், அடி, அக்ஷரம், சந்தம் பார்த்தே இலக்கணத்திற்குப் பயந்து நடந்தனர்.

---

* "A clock-work tintinnabulum of rhyme."—COWPER.

* இந்தப் பயத்தை உடைத்தெறிந்து, அடி, தளை, யாப்பு, அணி, கற்பனைகளை யெல்லாம் கனவுபோல் ஒதுக்கித் தள்ளி, உள்ளத்திற்குச் சொல்லோட்டம் கொடுத்த முதற் கவி **வால்ட் விட்மனே!** அவன் உலகிற்குத் தந்த முதன்மையான நூல், "**புல் லிதழ்கள்**" (**Leaves of grass**) என்று புகழ்பெற்ற காவியமணியாகும். அந்த நல்லிதழ் முகவுரையில் அவன் எழுதுகிறான்:

"**எனது** அமெரிக்கா சுதந்தர நாடு! இங்கே ஜனநாயக முழக்கமே அதிகம். பொது ஜனங்களுக்கு நாட்டுத் தலைவரே, இங்கே தொப்பி எடுத்து மரியாதை செய்வது வழக்கம்; ஜனங்கள் அவருக்குத் தொப்பி எடுப்பதில்லை. ஏனெனில், தலைவர் என்றால் பொதுஜனத் தொண்டரே. அமெரிக்கா தலைநிமிர்ந்து கைவீசி நடக்கும் சுதந்தர நாடு. அமெரிக்கர் சுதந்தர சமுதாயத்தார்: மிஸ்ஸிஸிபி நதிபோலும், நயகாரா அருவிபோலும், அவர்கள் வாழ்க்கை சுதந்தரமானது. ஆண்-பெண் வாழ்வு, கட்டற்ற மட்டற்ற உரிமை கொண்டது. அமெரிக்கத் தொழிலாளி, நட்பும், உழைப்பும், பொதுநல விருப்பமும் கொண்டவன்; செல்வத்திற் சிறந்தவன்; தொழில் திறமை

---

* "**Rhyme and metre are dead or dying devices, trickeries and acrobatics of verse-writing.**" (எதுகையும் சீரும் செத்த வழக்கம், கவிகட்டும் தந்திரம், தொம்பக் கூத்தாடி வேலை.)

—*F. S. Flint on "WHITMAN."*

யில் சிறந்தவன். அவன் வாணிபத்தில் உலகச் சந்தையை ஆளுகின்றவன். அமெரிக்கப் புலவன் வெறும் கனவு காண்கிறவன் அல்லன்; அவன் காரியவாதி; எண்ணத்திற்கு நிலையான செயல் வடிவம் தந்து, உலகிற்கு நலம் செய்பவன். அவன் எண்ணங்கள் பழையஅச்சில் இறுகிக் கட்டுப்பட்டன வல்ல; அவை சுயேச்சை கொண்ட அருவி போன்றன.

இப்படிப்பட்ட அமெரிக்க சமுதாயத்தைச் சேர்ந்தவன் நான்; ஆதலால், பழைய கட்டுப்பாடுகளையும் முட்டுப்பாடுகளையும் உடைத்தெறிந்து, கவிதைக்கும் வசனத்திற்கும் புதிய சுதந்தர ஓட்டந்தருகிறேன். ஆசான் எனினும் பாரேன்; அவன் எழுதிய வழக்கமான கருத்துக்களைத் தகர்த்தெறிவேன்; இதை அறிந்தோர், என் சுதந்தர நடையின் மாண்பைப் போற்றுவ துறுதி. உள்ளத்தைவெளிப்படையாக,சீர்தளைகளுக்குக் கட்டுப்படாமல், தைரியமாகச் சொல்பவனே கவிஞன். அவன், எதுகை மோனையின் அடிமை யல்லன். சொல்லிற்கும், யாப்பிற்கும், இலக்கணத்திற்குங் கூட அவன் அடிமையல்லன்: அவன் அவற்றின் தலைவன்; கருத்தின் முதல்வன். அவன் ஒரு சிருஷ்டி கர்த்தா; *அவன் மகா கவி;

* "The Greatest poet is the free channel of himself."
தந்தரமாகத் தன்வழி பற்றுவோனே மகாகவி. —*WHITMAN*.

அவன் தன்னையே உலகிற்குத் தாராளமாகத் தந்தருளும் காவிய கங்கை. அவனே சமுதாய வாழ்விற்குப் புதிய உருவந் தருகிறான். அரசியல், பொதுநலம், சமவுரிமை, கலை, கல்வி, தொழில், பயிர், வாணிபம், செல்வம், ஆண்-பெண் உறவு, காதல், பிரயாணம், உலகறிவு ஆகிய அனைத்தையும் பற்றித் தன் கருத்தைத் தனக்கே உரிய மொழியில் வெளியிட அவனுக்குச் சுதந்தரம் உண்டு. அவன் எதற்கும், எவனுக்கும், எந்தப் பழைய வழக்கத்திற்கும் தொத்தடிமை யல்லன். பழைமைக் குட்டத்தில் பாசி படர்ந்த பழக்கங்களை ஒழித்து, அவன் வாழ்விற்கு ஓட்டமளிக்கிறான். காலதேச வர்த்தமானங்களுக்கு அவன் கட்டுப்படாமல், அவற்றையே தனது இயற்புலமையால் வென்று ஆளுகிறான்.

உண்மைக் கவி ஒரு தீர்க்கதரிசி. அவன் பழங்கவிகளின் எதிரொலியல்லன்; பழைய வழக்கத்தின் பின்பாட்டுக்காரன் அல்லன். அவன் அவனே; தானே தான்! அவனுள் உலகும், இயற்கையும், மனிதர் உள்ளமும், கலையும், கடவுளும் அடக்கம்!

'மனிதா, நீ யாருக்கும் தலை வணங்காதே; நிமிர்ந்து நட; கைவீசிச் செல்; உலகைக் காதலி! காதலில் கூசாதே! செல்வச் செருக்கரை, கொடுங்கோல் அரக்கரை, மதவெறியரை ஒதுக்கித்தள்ளி, உன்

மனச்சாட்சியைப் பற்றி நட; ஏழைகளி டம் இரக்கங்கொள்; தொழிலாளிகளுக்கு ஆறுதலளி; பாடுபடும் கூலிகளுக்குப் பரிவு கொள்; தாராளமாகத் தா; உழைப்பை மதி; ஊருக்குதவு! உனக்கு எட்டாத கடவுளைப் பற்றித் தெரிந்ததாகப் பிதற்றுதே! உன் பேச்சையும் கருத்தையும் செயலையும் உலகளவில் நிறைவாகச் செய்! இந்தச் 'சர்ச்சிற்'கும், புத்தகத்திற்கும் கட்டுப் படாதே! எதையும் சிந்தித்துப் பார்! உனது மனத்திற்குப் பிடித்ததையே ஒப்பிச் செய்!' என்று நான் பாடுகிறேன். கவி, வெறும் நீதிப்புரோகிதன் அல்லன்; உவமையணிகளிலும், வர்ணனைகளிலும் விளையாடிக் காலங்கழிப்பவன் அல்லன். அவன் எல்லாரையும் சரிநிகர் சமானராகத் தன்னுடன் வெளிப்படையாக வாழ அழைக்கிறான்.

சகோதரர்காள், சகோதரிகாள்! என்னுள் உள்ள பொருளே, உங்களுள் உள்ளது. நான் உணர்வதை நீங்களும் உணரலாம். என் இன்பம், உங்களுக்கும் உரிமை பயக்கும். வாருங்கள்! என் பக்கத்தில் நின்று, நீங்களும் காலக் கண்ணாடியால் என்னுடன் உலகைப் பாருங்கள்! மனிதர்களே, 'பரம்பொருள் ஒன்றே; நாமெல்லாரும் அதன் அடிமைகளே' என்னுதீர்கள்! பரம்பொருள் அனந்தம்! என்னுள் உள்ள அதுவே, உங்களுள்ளும் உள்ளது! ஒவ்

வொருவருக்கும் தத்தம் கண்களால் பரம் பொருளைக் காண எவ்வளவு உரிமை யுண்டோ, அவ்வளவு தத்தமது உள்ளத்தால் காணவும் உரிமையுண்டு. உங்கள் உள்ளேயுள்ள கடவுட் பெருமையைக் காணுங்கள்; உள்ளுணர்வில் ஓங்கி நில்லுங்கள்! யாருக்குந் தாழ்வாக உங்களை நினைக்க வேண்டா! நீங்கள் எவர்க்கும் சேவகர்களெனக் கருதாதீர்கள்! நீங்கள் எஜமானர்கள்; தலைவர்கள்; தலை நிமிருங்கள்!

உண்மையைச் சொல்லுகிறேன்: ஆண்-பெண் சைதன்யத்தை விட, உலகில் கண்கண்ட தெய்வமில்லை. பழையகால அற்புதப் பொய்களை நம்பாதீர்கள்! இதோ உடல், உயிர், மனம், ஆன்மா உள்ளன! இவற்றைக் கொண்ட ஆண்பெண் வாழ்வையே பூரணமாக்குங்கள்; அகம்பாவக் கொடுங்கோலரை வீழ்த்துங்கள்; தாழ்த்தப்பட்டவரை உயர்த்துங்கள்; பழைய கொடுங்கோல் பித்தரை எள்ளித் தள்ளுங்கள்; 'தான்' என்று செருக்காடி, மேடையில் ஜம்பமடித்துப் புகழ்வேட்டையாடும் பரம்பரை அரசியல் வாதிகளையும், அதிகப் பிரசங்கிகளையும், போலிப் பகட்டரையும், புரட்டரையும் புரட்டித் தள்ளுங்கள்! பழைய கொடுங்கோல் வீரர் பெயரைக் குழந்தைகளுக்கு இடாதீர்கள்! நான் பொய்மையை வெறுக்கிறேன்; போட்டி

பொறுமைப் போர்களை வெறுக்கிறேன்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் வஞ்சகக் காரியவாதிகளை வெறுக்கிறேன். நான் எனது மனத்தை ஒளியாமல் வெளிப்படையாக, உள்ளிருந்து, வெளி மனிதனுக்கே பேசுகிறேன். கைச்சரசம் செய்கிறவனைப்போல், நான் தனிமை தேடவில்லை; நடுத்தெருவில் எல்லார் முன்னும் வந்து, எனது உள்ளத்தை உள்ளபடி வெள்ளையாகப் பேசுகிறேன்.

கேளுங்கள் எனது கட்சியை: இனி, உலகில் புரோகிதர், சாமியார் அதிகாரம் நடக்காது. அவர்கள் காலம் மலையேறிப் போனது. ஒவ்வொரு மனிதனும், தனக்குத் தானே உபதேசியா யிருப்பான்; தன் நெஞ்சைத் தொட்டுப் பார்த்து, நிமிர்ந்து நடப்பான். உலகில் பழைய கட்டுப்பாடுகள் ஒழியும்; புதிய சுதந்தர ஜாதி ஓங்கும்......!"

* * *

இதுவே, அந்தப் புரட்சிக் கவியின் உள்ளம்! இதுவே, அவன் கவிதைக்கு எளிமையும் தெளிவும், உலகளாவிய விரிவும், வீறும், (Simplicity, universality & vitality) தருகின்றது.

2. நல்ல கவிக் கிழவர்

'இஃதென்ன கவி? எதுகை யில்லை, மோனை யில்லை; இலக்கண மில்லை, இலக்கிய மில்லை; பொருளும் பொருந்த வில்லை; ஊக மில்லை, வேகமில்லை........சுத்தப் பைத்தியம்; வெள்ளைக் காகிதத்தைக் கறுப்பாக்கி யிருக் கிறது........கிழித்துக் குப்பையிலே போடு, இக் கவியை; அல்லது அத்லாந்திக் கடலில் எறி!' —இதுதான் அந்தக் காலம் விட்மனுக்குக் கிடைத்த சம்பாவனை! இன்று! 'ஆ, விட்மன்! புல்லிதழ்ப் புலவன்; நல்லிதழ் ஆசான்; புது யுகக் கவி; தீர்க்கதரிசி!' என மண்ணுலகம் விண்ணளாவக் கொண்டாடுகிறது!

உலகில் மகான்கள் சிலர் வருகின்றனர்: அவர்கள் அடக்கமாக வாழ்ந்து, தமது மனச் சாட்சி சொல்லும் உண்மைகளையே, யாருக்கும் அஞ்சாமல், மனித சமுதாயத்திற்குச் சொல்லு கின்றனர்; எழுதிவைத்துச் செல்லுகின்றனர்;

அவர்கள் சுற்றிலும் உள்ள மனிதர் அறிந்து கொள்ளாத புதுவழியில் நடக்கின்றனர். நிகழ் காலம், அவர்களை அறியாமல்—அறிந்தாலும் மதியாமல்—பொறுமைகொண்டு தாக்குகிறது. எதிர்காலம் அவர்களைப் போற்றிப் புகழ் கிறது; அவர்கள் வாக்கை, வேதமெனக் கொண்டாடுகிறது; குப்பையெனத் தள்ளிய நூலை, உச்சிமேல் வைத்து வணங்குகிறது; அன்று சுத்தப் பைத்தியமா யிருந்தவர்கள், இன்று புதியவழி காட்டிய மகான்கள் ஆகி றார்கள்.

இத்தகைய மகான்களில் ஒருவனே நம் **வால்ட் விட்மன்!** விட்மனின் 120-ஆம் ஆண்டுவிழா, அமெரிக்காவில் அமளியாக நடந் தது: அவன் தலைபோட்ட தபால் முத்திரை கள் வழங்கின. நியூயார்க் உலகச் சந்தையில் **(World Fair)** விட்மனுக்குச் சிலை நாட்டினர் அமெரிக்கர்; அவன் எழுதிய '**புல் லிதழை**, பல்லாயிரக் கணக்கில் அச்சிட்டு உலகெங்கும் பரப்பினர். அதை, அமெரிக்கக் காங்கிரஸ் புத்தகசாலை கொட்டை எழுத்தில் அச்சிட்டு வழங்கியது. நாடெல்லாம் விட்மன் படத்தை வாகைசூட்டி வணங்கியது. "**நல்ல கவிக் கிழவர்**" **("Good Grey Poet")** என்று உலகெல்லாம் விட்மனைப் போற்றுகிறது! இந்த 'நல்ல கவிக் கிழவ' ரைத் தமிழரும் அறிய வேண்டு

மன்றோ? அதற்காகத்தான், இந்த நூல் எழுந்தது.

•

விட்மனுக்குப் பிறகு, ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் யாப்பிலக்கணக் கட்டுப்பாடுகளை மீறிய புரட்சிக் கவிஞர் பலர் எழுந்தனர். இப்போது நமது தமிழ்நாட்டிலும் அப்படிச் சிலர் எழுந்து சுதந்தரக் கவி பாடுகின்றனர். அத்தகைய கவிகளுக்கு, விட்மன் வழிகாட்டியாயிருக்கிறான். அவன் வாழ்வும், வாக்கும், இளந் தமிழருக்குப் புதிய ஊக்கமளிக்கும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 JAN 1943
MADRAS

3. ஏழைக் குடும்பம்

லாங் ஐலண்டில் (Long Island) வெஸ்ட் ஹில்ஸ் (West Hills) உள்ளது. அஃது, இயற்கை அழகிற் சிறந்தது. அங்கே ஓர் எளிய வீடு; சுற்றிலும் வயல் வரப்புகள். அந்த வீட்டில் குடியானவனொருவன் வசித்துவந்தான். அவன் பெயர் வால்டர். அவன் வயலில் பாடுபட்டும், தச்சுத் தொழில் செய்தும், தன் பெரும் குடும்பத்தைக் காப்பாற்றிவந்தான். அவனிடம் பணம் இல்லை; குணம் உண்டு. அவன் வறிஞன்; ஆனால், இயற்கையறிஞன். அவன், கலைப் புலவன் அல்லன்; உலகியலை அறிந்த அனுபவி; சுதந்தர மனம் படைத்தவன். அவன் மனைவி, டச்சுக்கார னொருவனுக்கும் இங்கிலீஷ்காரி யொருத்திக்கும் பிறந்தவள்; அன்பும், பரோபகாரமும், சுதந்தர மனப்பான்மையுங் கொண்டவள்.

இந்த இருவர் பெற்ற செல்வனே **வால்ட் விட்மன்.** அவன் 1819-ஆம் ஆண்டு பிறந்து, 73 ஆண்டுகள் வாழ்ந்தான். பெற்றோர் இக் குழந்தையைக் கருத்துடன் வளர்த்துவந்தனர். ஆனால், வறுமை! பயிர்த்தொழில் கட்டிவர வில்லை. தந்தை வால்டர், தமது குடும்பத் துடன் 1823-ஆம் ஆண்டு புருக்லின் (Brooklyn) நகரத்திற்குச் சென்று, தச்சு வேலைசெய்து பிழைத்தான். அப்போது விட்மன் நான்கு வயதுக் குழந்தை; குழந்தையா யிருந்த போதே விட்மன் இயற்கையழகில் விளையாடி னான்; வீட்டைவிடத் தோட்டந் துரவுகளையே விரும்பினான்; இயற்கையின் பசுமைத் தோற் றத்திலும், மலர் நகையிலும் காதல் கொண் டான்; புட்களின் பாட்டைக்கேட்டு மகிழ்ந் தான்; கடற்கரைக்கு அடிக்கடி சென்று, தனியே அமர்ந்து, அலைகளின் அகண்ட கீதத்தை அனுபவித்தான். விட்மன், வழக்கப் படி பள்ளிக்கூடம் சென்று எண்ணெழுத்துக் கற்றான். அப்போது ஒரு நாள், அமெரிக்கச் சுதந்தர வீரனான ஜார்ஜ் வாஷிங்டனுக்கு வலக் கை போலுதவிய ஜெனரல் லஃபாயெத், அங்கே ஒரு பொது வாசக சாலைக்கு அஸ்திவாரக் கல் நாட்ட வந்தார். இடம், குழியும் கற்குவியலுமா யிருந்தது. பெரியவர்கள், பாலர்களைத் தூக்கி நல்ல இடத்திற் கொண்டுவந்தமர்த்தினர். லஃபாயெத், நமது விட்மனை அன்புடன் தூக்கி

மார்போடணைத்து முத்தமிட்டுப் புன்னகை புரிந்து, நல்ல இடத்தில் அமர்த்தி ஆசீர்வதித்தான். பன்னிரண்டு வயதுடன் விட்மன் படிப்பு நின்றது; மேற்கொண்டு படிக்கப் பணமேது?

4. இயற் புலமை

படிப்பு வேறு; புலமை வேறு: அது செயற்கை; இஃது இயற்கை. ஷேக்ஸ்பியரும், ஹோமரும் எந்தக் கலாசாலேயில் படித்துப் பட்டம் பெற்றனர்? அவர்கள் புலமையுடன் பிறந்து, புலவர் விருந்தாக வாழ்ந்தனர். வால்ட் விட்மனும், இயற்கையில் இயற்கையாக வாழ்ந்து, இயற்கை தந்த புலமையால், இயல்பாக வந்ததை வந்தபடியே எழுதி உலகிற்குத் தந்து சென்ருன். வறிய குடும்பத்திற் பிறந்த அவன், பையற் பருவத்திலேயே வேலேசெய்து சம்பாதிக்க வேண்டியவனுக இருந்தான். அவன், தந்தைக்குத் தச்சு வேலேயில் உதவி வந்தான்.

நிலேமை, புலமையை வளர்க்கிறது: ஷேக்ஸ்பியர் செல்வரா யிருந்திருந்தால், நாடகத் தொழிலேத் தேடியிருக்கமாட்டார். நமக்கும்

ஹாம்லெட் (Hamlet) கிடைத்திராது. வறுமை, அவரை மேடையேற்றியது; மேடை, நாடகக் கவியாக்கியது. விட்மனும் வறுமையில் வாடினவன். அவன் வாழ்க்கை 1819-1848 வரையில், வறுமையில் இயற்கையைத் துணைகொண்டு வழி தடவிச் சென்றது; 1848-1873 வரையில், கவிதைச் சுவையிலும், பரோபகாரத்திலும் மகிழ்ச்சி கொண்டது; 1873-1892-ல் வயதின் சுமையால், மெலிந்து தள்ளாடிச் சாவைநோக்கி யாத்திரை செய்தது.

விட்மனுக்கு ஆக்கமளித்தவை, இயற்கையும், உழைத்துண்ணும் வறிய வாழ்வுமே. தனது இளம் பருவத்தை அவன் இவ்வாறு வர்ணிக்கிறான்:

"நான் பையனாயிருக்கையில், காலையில் எழுந்ததும் ஆவலாக மலர்கனி வனத்திற்கு வெறுங்காலுடன் ஓடுவேன்; புட்களின் பாட்டைக் கேட்பேன். அவை, ஆணும் பெண்ணும் அன்புடன் கூடிப் பெற்றுப் பெருகி, குஞ்சுகளைக் கொஞ்சி வளர்க்கும் நேர்த்தியைக் கண்டு வியப்பேன்; மனிதன், அந்த மாதிரி இயல்பாக வாழக்கூடாதா என்று நினைப்பேன்; கடல் பொங்கி யெழுந்து பாடும் பாட்டைக் கேட்பேன். இரவில், மதிநிலாவில் குளிப்பேன்; நிறைமதி கண்ட கடல் பூரித்துக் கைகொட்டிக் கூத்தாடுவதைக் கண்டு,

பெருமகிழ் வெய்துவேன்; அந்தச் சந்திர
னுக்கும் கடலுக்குந்தான் எவ்வளவு
காதல்! கடலன்வு காதலுடன் இயற்கை
என்னுள்ளத்தில் பரவசப் பாட்டொலிக்
கும்; பறவைகள் பாடும்போதே, 'நானும்
ஒரு கவி, பாடகன்' என்று நினைப்பேன்!
ஓ இளமையே, இன்பப் பாட்டு மயமே,
காற்றிலும் கடலிலும் வயலிலும் வனத்
திலும் காதல்கொண்ட இளமையே!..."

விட்மன் பழைய பழக்க வழக்கங்களில் கட்டுப்படாமல், சுயேச்சையாகத் திரிந்தான். சுதந்தரமே அவன் கடவுள்.

5. அச்சுத் தொழிலாளி

தந்தை சம்பாதித்தது போதாது; மகனும் பத்துக்காசு கொண்டுவந்தால்தான் குடும்பம் நடக்கும்: இதை விட்மன் அறிந்தான்; ஒரு வக்கீலிடம் சேவகம் செய்து, தன் வயிற்றிற்குச் சம்பாதித்தான். இப்படி இரண்டாண்டுகள் சென்றன.

தான் வேலை செய்த தெருவிலிருந்த ஓர் அச்சுக்கூடத்தில் அவன் கவனம் சென்றது. அச்சுக்கோப்பாளரைச் சிநேகம் செய்து கொண்டு, தானும் எழுத்துக் கோக்கப் பயின்ருன். அந்த வேலை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. பதினேழாம் வயதில் அவன் அச்சு வேலையில் திறமை பெற்ருன்; அச்சுக்கூடங்

களில் கோப்பாளனுக (Compositor) வேலை செய்தான். அச்சுத் தலைவர், விட்மனைத் தன்னுடன் சாப்பிட்டிருக்கச் செய்தார். அவர் நடத்திய பத்திரிகையில் விட்மன் சிறு கட்டுரைகளும் எழுதிவந்தான்.

நல்ல இலக்கியங்களைக் கோத்து அச்சிடுவதில், விட்மன் பெருமகிழ் வெய்தினுன். தான் கோக்கும் இலக்கியங்களை அவன் கற்றுச் சிந்தித்தான். இவ்வாறே அவன் அறிவில் முதிர்ந்தான். அவன் பள்ளிப்பாட நூல்களைக் கோத்து அடித்தான். அப்போது அவன் உள்ளம் ஏழை மாணவரிடம் சென்றது. அப்புத்தகங்களில் உள்ள பொருளை ஏழை மாணவருக்குச் சொல்லித்தரவேண்டுமென்று அவன் விரும்பினுன். தன் விருப்பத்தை நிறைவேற்ற விட்மன் நாலேந்தாண்டுகள், தான் பிறந்த லாங் ஐலண்டில் பள்ளிக்கூட உபாத்தியாயனுகிச் சிறுவருக்கு அன்புடன் அறிவுப் பணி புரிந்தான். அக்காலம், விட்மன் பத்திரிகைகளை ஏராளமாகப் படித்தான்; இடையே ஒரு பத்திரிகையும் நடத்தி விட்டான்.

அக்காலம் அவன் அடிக்கடி, தனித்து இயற்கையுடன் உறவாடினுன்; வாரக்கணக்காக வனங்களிலும், ஏரிக்கரைகளிலும் சுற்றினுன்; சாப்பிடும்போதுகூடப் படித்தான்.

அவன் படிப்பு, புத்தகக் கணக்கில் இராது: ஸ்காட் நாவல்கள்—முதன்மையாக The Heart of the Midlothian—டென்னிஸன், பைபிள், ஹோமர் மொழிபெயர்ப்பு ஆகியவற்றையே, அவன் பாராயணம் செய்துவந்தான்.

6. இதழாசிரியன்

தந்தை இறந்தபிறகு, விட்மன் குடும்பக் கவலையை விட்டான்; தச்சு வேலையையும் விட்டான்; 'பொதுஜன வாக்கை எதிரொலித்து நாட்டை யாளுவது, பத்திராதிபர் பேனாவே' என்றறிந்தான். அவன் தானும் ஓர் இதழாசிரியனாக அவாவினான். அதற்கேற்ற தகுதி பெற்று, லாங் ஐலண்டர் (The Long Islander) என்றொரு பத்திரிகையைத் தொடங்கினான். அதன் வாயிலாக உள்ளூர்ச் செய்திகளை நாட்டிற்கும், நாட்டுச் செய்திகளை உள்ளூருக்கும், அவன் அறிவித்தான். ஆனால், அதன் பயனை மக்கள் சரிவர அறியவில்லை. தொழிலில் நஷ்டம் வந்தது. இரண்டாண்டுகள் எப்படியோ சிரமப்பட்டு நடத்திப் பிறகு பத்திரிகை நிலயத்தை விற்றுவிட்டான் விட்மன். இச்சமயம் ஜமைக்கா (Jamaica) வில், லாங் ஐலண்ட் டெமொக்ராட் (Long Island Democrat) என்ற பத்திரிகைக்கு ஆசிரிய

ரொருவர் வேண்டியிருந்தது. விட்மன் முயன்று அவ் வேலையைப் பெற்ருன். இதழாசிரியர் வேலை அவனுக்குப் பிடித்திருந்தது. அவன் தன் ஜனநாயகக் கொள்கைகளைத் துணிந்து வெளியிட்டான். அத்துடன் அவன் கவி புனைந்து வெளியிடவும் தொடங்கினுன். இக் காலம் அவன் குடித்ததில்லை; புகைத்ததில்லை; ஆணையிட்டுப் பேசியதில்லை. அவன் மதுவிலக்கிற்காகப் பாடுபட்டான்.

7. சுதந்தரக் கவி

எதுகை, மோனை, தளை, துறைகளை ஒதுக்கியெறிந்தான் விட்மன். பறவைபோல, அவனும் கவி பாடினான். *

“One’s-Self I sing a simple separate person,
  Yet utter the word “*Democratic*,” the word
    En-Masse.

Of physiology, from top to toe I sing,
  Not physiognomy alone, nor brain
    alone is worthy for the muse ;

---

* இதே காலத்திலேதான், மல்லார்மே (Mallarme) என்னும் ஃப்ரெஞ்சறிஞன் (*1842–1898*), அரிய வசன காவியங்களைச் செய்தான் ; அவன் சிறந்த ஆங்கிலப் புலவனும் ஆவான்.

I say the Form Complete is worthier far....
The Female equally with the Male I sing.
Of Life immense in passion, pulse and
power
Cheerful, for Freest action formed
under the Laws Divine ;
The Modern Man I sing !"

(Song of Myself)

எளிய தனியாளான அந்தராத்மாவை
நான் பாடுகிறேன் ;
எனினும், மொத்தமாக 'ஜனநாயகம்' என்னும்
பதத்தை உபயோகிக்கிறேன்—
மனித வடிவைத் தலைமுதல் கால்வரையில்
நான் பாடுகிறேன் ;
முகவிலாசம் மட்டுமோ, மூளைமட்டுமோ அன்று ;
முழு மனித வுருவும், உள்ளும் புறமும்,
கவிதைக்கு மிகச் சிறந்ததாம்.
நான், ஆணையும் பெண்ணையும் சமமாகப்
பாடுகிறேன்.
சர்வ சுதந்தரச் செயலுக்காக
ஆசையும், துடிப்பும், ஆற்றலும், இன்பமுங்
கொண்டு,
தெய்வ நியதிகளால் அமைந்த
அளவற்ற வாழ்வை நான் பாடுகிறேன்.
நான் தற்கால மனிதனைப் பாடுகிறேன் !......

என்று தொடங்கியது விட்மன் கவிவாணி !

அப்புதுக் கவி, ஜனங்கள் கண்ணிற் பட்டது; கருத்திற் படவில்லை. விட்மன், பத்திரிகை வேலையை விட்டு, மன்ஹாட்டன் (Manhattan) என்ற ஊரில், மீண்டும் அச்சுக் கோக்கும் வேலையிலேயே அமர்ந்தான்; அங்கிருந்தவாறே பல நகரப் பத்திரிகைகளுக்குத் தன் புதுக் கவிகளையும், சிறு கதைகளையும் அனுப்பிவந்தான்; பிறகு, பல பத்திரிகை நிலயங்களில் அலுவல் செய்தான். 1841-ஆம் ஆண்டு, முதன்முதல் தான் எழுதிய நாவலை, ஒரு நியூயார்க் பத்திரிகையில் விட்மன் வெளியிட்டான்; அதன் பெயர், "ஃப்ராங்க்ளின் ஈவான்ஸ்" (Franklin Evans). அப்போது அந்நூலை யாரும் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை; இப்போது, அது பொன்விலை பெற்று விளங்குகிறது! 1846-ஆம் ஆண்டுமுதல் விட்மன், "புரூக்லின் டெய்லி ஹெரால்டு" (Brooklyn Daily Herald) என்ற பத்திரிகைக்கு ஆசிரியனானான்; தன் கொள்கைகளை அதன்மூலம் பிரசாரம் செய்தான்; ஏராளமான கவிதைகள் வெளியிட்டான். இச் சமயம், விட்மன் பத்திரிகையில் அடிமைச் சந்தை (Slave Market) யைக் கண்டித்து, விடுதலை முழக்கம் செய்தான்.

8. விட்மன் நண்பர்கள்

விட்மன் நண்பர்களில் குறிப்பிடத்தக்க வர் இருவர்: ஆபிரஹாம் லிங்கன் (Abraham Lincoln), ஒரேஸ் டிராபெல் (Horace Traubel).

அமெரிக்காவில் அடிமை வியாபாரத்தைக் கண்டிக்க முன்வந்த விடுதலை வீரன், ஆபிர ஹாம் லிங்கன். அவன் ஏழைகளுக்காக வாழ்ந் தான்; இறுதியில் தனது கொள்கைக்கே பலி யானான். அவன் நாற்பது இலட்சம் பேர்களை அடிமை வாழ்வினின்றும் விடுதலை செய்து சுதந் தரமாக வாழச் செய்தான்; "கல்வியன்று, பண மன்று; மனமும் குணமுமே மனிதனை உயர்த் தும்" என்ற உண்மையை வாழ்வில் விளக்கி னான். லிங்கனுக்கு விட்மன் பேருதவி செய் தான். அவனைப் போற்றிப் புகழ்ந்து, விட்மன்

தன் வாக்கினாலும், பேனாவாலும் இயன்ற உதவி செய்தான்; லிங்கன் கொலையுண்ட செய்தி கேட்டுக் கண்ணீர் உகுத்து, அவனுக்கு உருக்கமான பாமாலை சூட்டினான்.

விட்மனுடன் நெருங்கிப் பழகிய மற்றொரு நண்பனான ஒரேஸ் டிராபெல், புல் லிதழுக்கு அரிய முன்னுரை எழுதி யிருக்கிறான். அதில் அவன் பின்வருமாறு கூறியுள்ளான்:

> "சிறுவனா யிருக்கும் போதே, நான் விட்மனைச் சந்தித்துப் பழகினேன். அக் காலம் கன்கார்டி லிருந்த எமர்ஸன், காம்ப்டனிலிருந்த விட்மன் ஆகிய இரு வரையும், அறிஞர் அடிக்கடி வந்து பார்த்துப் பேசுவர். அறியாதவர்கள், அந்த இரண்டு ஊர்களையும் "பாஷாண்டிபுரங்கள்" என்று வைவர்! "விட்மனா? சை, சை; அவனிடம் போகாதே; போக்கிரிக் கிழவன்!" என்று எல்லோரும் என்னைக் கண்டித்தனர்; தாயார்கூடக் கண்டித்தாள்; என்னைப் பலர் சந்தேகித்து, வீட்டிற்குள் விடவும் தயங்கினர். விட்மனை அக் காலம் பலர் பகிஷ்கரித்துத் தூற்றினர். அவர் எழுதிய புல் லிதழை, சமீபத்தில்கூட, ருஷ்யாவில் கொளுத்திச் சாம்பலாக்கினர். இங்கே, ஒண்டாரியோவில் அதை "ஆபாச நூல்" என்று அழித்தொழித்தனர்.

"அரைகுறைப் பேர்வழிகளுக்கு விட்மன் அருமை தெரியாது. எமர்ஸன், தோரோ, ஆல்காட், டென்னிஸன், ஸைமண்ட்ஸ், ரோசெட்டி, டௌடன் போன்ற புலவர்மணிகளே அவர் அருமையை அறிந்தனர்; இவர்களே விட்மன் நண்பர்கள். இவர்களுக்கு விட்மன் அடிக்கடி கடிதம் எழுதுவார்; அக் கடிதங்களை நானே தபாலிற் போட்டுவருவேன். இவர்களைப்பற்றி, விட்மன் என்னிடம் மனங்குளிரப் பேசுவார்: 'என் நண்பர் மிகச் சிலரே; ஆனால், பலரையும்விட, அவர்கள் உண்மையான நண்பர்கள்!' என்பார் விட்மன்."

"இன்று விட்மனை, ஐரோப்பா, சீனா, ஜப்பான், நியூஜிலந்து எங்கும் அறிஞர் போற்றுகிறார்கள்; அவர் பாடல்களுக்கு இராகம் அமைத்துப் பாடுகிறார்கள்! ஒரு சமயம் எர்னெஸ்ட் ரைஸ் (Ernest Rhys) என்பவருடன் காம்ப்டனில் விருந்துண்ட போது, அவர் விட்மனிடம், "புல்லிதழை நான் பல உணர்வுகளுடன் பாடினேன்! என்னையும் அறியாமல் என்னுள் ஏதோவொன்று, அதைப் பாடியதாகவே உணர்ந்தேன்!" என்றார். 'நான் அதைத் தனி ஒருவனுக்கோ, தனி நாட்டிற்கோ பாடவில்லை; மனித சமுதாயத்திற் கெல்லாம் பயனாகவே, அதைப் பாடினேன்; பண்டைய

பழக்கங்களிலிருந்து விடுபட்டு, ஆணும் பெண்ணும் புதிய சுதந்தரவாழ்வு வாழ வேண்டும்; மனிதனை மனிதன் தனதாக அறியவேண்டும். நான், குறுகிய சாதிநிறப் பான்மைகளையும், பிரிவினைகளையும் உடைத்தெறிந்து, எல்லாரும் சரிநிகர் சமானராக வாழும் பூரண ஜனநாயகத்தை நாட்டவே விரும்புகிறேன்; எனது ஜனநாயகம் இன்னும் வரவில்லை; வருங்காலத்திலே தான், அஃது உருவாகவேண்டும்!' என்றார் விட்மன்."

விட்மன் உயிருடன் இருந்தபோதே, "புல் லிதழ்களின்" பதிப்புகள் எத்தனையோ வெளியாகி விட்டன. ஒவ்வொரு புதிய பதிப்பும் வெளிவரும்போது, அதை நண்பர்கள் வாங்கி வந்து விட்மனிடம் காட்டுவர். அதைக் கண்டு மகிழ்ந்து, "புல் லிதழ்களின் புதிய பதிப்பு ஒவ்வொன்றும், புதிய வுலக வெற்றி" ("Every new edition of the 'Leaves of Grass' is the conquest of a New world") என்பான் விட்மன்!

விட்மன் எளிமையின் இன்பச்சிகரத்தைக் கவிக்கனவிற் கண்டான்; அஃது, அவன் கண் முன்பே உருவாகிச் சித்திபெற்றது!

9. கொள்கையே பெரிது!

இனி, நமது கவனத்தை "புரூக்லின் டெய்லி ஹெரால்டு" பத்திரிகாலயத்திற்சிறிது செலுத்துவோம்: அதன் ஆசிரியராயிருந்த விட்மன் போக்கும், சுதந்தரவாணியும் பத்திரிகை முதலாளிக்குப் பிடிக்கவில்லை; விட்மன், ஆபிரஹாம் லிங்கனுடன் மனமொத்து அடிமைச் சந்தையைப் பலமாகக் கண்டித்துப் பேசினன்; எழுதினன். அடிமை முறையை ஆதரிக்கும் கட்சிக்கும், எதிர்க்கும் கட்சிக்கும் இரத்தப்போர் நடந்தது. இச்சமயம் விட்மன்-பேனவுக்கு,முதலாளி கட்டுப்பாடு விதித்தான். "நான் என் மனச்சாட்சியை வயிற்றுப் பிழைப்பிற்கு விற்க வரவில்லை; உன் வெள்ளியன்று, என் கொள்கையே பெரிது (Not *your* dollar, but *my* ideal is supreme)" என்று விட்மன் இதழாசிரியர் வேலையை உதறித்தள்ளி, 1848-ஆம் ஆண்டு, நியூ ஆர்லியன்ஸுக்கு வந்தான்.

நியூ ஆர்லியன்ஸில் விட்மன் 'கிரெஸெண்ட்' (The Crescent) என்ற பத்திரிகையை நடத்தினன். பத்திரிகைத் தொழில் கட்டிவரவில்லை; சில மாதங்களில் அப்பத்திரிகை நின்றது.

இப்போது விட்மன் 30 வயதுக்காளை; வயதுக்குரிய அந்த உணர்ச்சி அவனுக்கும் இருந்தது. அவன் உயர்குலப் பெண்ணொருத்தியைக் காதலித்தான்; அவளும் அவனிடம் பாசங் கொண்டாள். இருவரும் கண்டனர்; ஆசைகொண்டனர்; கூடிவாழ்ந்தனர்; புரோகிதரில்லை; கலியாணச் சடங்கில்லை. விட்மனுக்குக் குழந்தைகள் பிறந்தன; ஒரு பேரன் கூட உண்டு. ஆனல், விஷயம் இரகசியமானது; சட்டென்று அவள் விலகிக் கொண்டாள். அவன் ஆயுள் முழுவதும் தனியாகவே வாழ்ந்தான்; ஆனல், தன் பேரனுக்கு அடிக்கடி கடிதம் எழுதிவந்தான். தான் தந்தையானதை அவன் மறைக்கவில்லை; ஆனல், காதலி பெயரைமட்டும் பகிரங்கப்படுத்த மறுத்துவிட்டான்; காதலிக்கு அவ்வாறு உறுதி கூறியிருந்தான்.

விட்மனுக்கு நியூ ஆர்லியன்ஸ் வாழ்க்கை புளித்தது. மீண்டும் அவன் புருக்லின் வந்து தன் தகப்பனருக்கு உதவியாயிருந்து, ஏழைத் தொழிலாளருக்குக் குறைந்த செலவில் வீடு

கட்டித் தந்து, தொண்டு செய்தான்; நியூயார்க், சிகாகோ முதலிய நகரங்களுக்குச் சென்று நண்பரைக் கண்டு புதிய அனுபவங்கள் பெற்ருன்.

இக்காலத்தில் விட்மன், பேரறிஞர் இலக்கியங்களை ஆழ்ந்து கற்கத்தொடங்கினன். ரூசோ (Rousseau), வால்தேர் (Voltaire), கெத்தே (Goethe), ஷ்லெகல் (Schlegal), ஷில்லர், சாசர், ஷேக்ஸ்பியர், டிரைடன் (Dryden), மில்தன், கீட்ஸ், ஷெல்லி முதலிய ஆங்கிலக் கவிகளையும், சிறந்த அமெரிக்கக் கவிகளையும், விட்மன் படித்தான். எனினும், அவன் மனத்தைக் கொள்ளை கொண்டது, **பகவத் கீதையின்** ஆங்கில மொழி பெயர்ப்பே! எமர்ஸன், விட்மன் இருவரும் கீதையை மதித்துப் போற்றிய அமெரிக்க ஆத்ம ஞானிகளாவர்!

10. புல் லிதழ்கள்

புரூக்லின் ஃபுல்டன் (Fulton) தெருவில், "ரோமன் சகோதரர் அச்சகம்" இருந்தது. அதில் சிறுதொகை கொடுத்து, தானே அச்சுக்கோத் தடிக்க மேற்கொண்டு, தன் காவியங்களை நூலாக்கினன் விட்மன்! ரோமன் சகோதரர் அச்சகத்தில், ஷர்ட்டும், கால்சராயும், கறுப்புக் கம்பளிக் குல்லாவும் அணிந்து, ஆறடி உயர மும், நல்ல பருமனும் உள்ள தாடி நரைத்த கிழவன் ஒருவன், மெய்மறந்து தானே அச்சுக் கோத்து, பாரம் கட்டித் தனது நூலை அச்சிடக் கண்டவர் வியந்தனர்! அவனே வால்ட் விட்மன்! "புல் லிதழ்கள்" (Leaves of Grass) என்ற நூல் வனப்பாயிருந்தது: பச்சை அட்டை; பொன்னெழுத்தில் நூலின் பெயர்; உள்ளே ஆசிரியரின் திருவுருவம்; புதிய வசன—காவிய மணிகள்; விலை இரண்டே டாலர்! இருந்து மென்ன?

11. வசை யம்புகள்

நூலை வாங்குவார் யாருமில்லை. பத்திரிகை மதிப்புரைகளுக்காக நூலை அனுப்பினன் விட்மன். பத்திராதிபர், அந்நூலை ஒரு பொருட்டாகவே மதிக்காமல், மூலையில் போட்டுவிட்டனர். அங்குமிங்கும் இரண்டொருவர், நூலிற் புதுமை கண்டு, "நியூயார்க் விறைப்பு" (A New York Tough) என்றனர். அந்நூலை எள்ளியிகழ்ந்தவர் கணக்கிலர்: "என்ன, விட்மன் புத்தகம் போட்டிருக்கிருனே, பார்த்தாயோ? பெயர் புல், புல்லன் எழுதிய புல்! ஒரு புல் கூடப் பெருது; மண்ணும் பெருது!" என்று வம்பர் தூற்றினர். யாராவது அந்நூலைப் புகழ்ந்தால், புகழ்ந்தவனை, "போடா முட்டாள்!" என்பவர் அதிகரித்தனர். "போஸ்டன் இண்டெலிஜென்ஸ்" (Boston Intelligence) என்ற பத்திரிகை, "இந்நூல் எழுதினவன், "தப்பியோடிய பைத்தியம் (Escaped Lunatic)" என்றது. விட்மனே, எளியர்

நண்பன்; அவர்களுக்காகவே கவி எழுதி ஞன்; அவர்களும் அவனை அறியவில்லை!

இரண்டாண்டுகள் அந்நூலின் பெயரால் வாயாடிகள் பெரிய வசைக் கிளர்ச்சி செய்தனர்; அதைப்பற்றி ஆபாசக் கவிகள் புனைந்து ஆசிரியரைச் சல்லித்தனமாகப் பழி தூற்றினர். அக் கவிதைகளில் ஒன்றைக் கேளுங்கள்:

"புல்லிதழ்க் கவிகளாம்! இவை கவிதைகளா? புல்லன் உளறிய புன்சொற்கள்! இந்த ஆபாசக் களஞ்சியம் மனித சமுதாயத்திற்கே அவமானமாகும்; தொத்து நோய் போன்று இந்த அபத்தக் கவிகள் தீமைசெய்யும். இப் புல் லிதழின் ஒவ்வொரு பக்கமும் குப்பை மேடு; ஒவ்வொரு வார்த்தையும் குப்பையில் ஊறிய நாற்றம்; அழுகல்! இந்த அழுகலைக் கக்கிய கிழட்டுப் புல்லன் உள்ளமும் ஒரு நாற்றச் சாக்கடை! இந்த நூற்றாண்டின் அழுக்குப் பிடித்த ஆபாச நாற விலங்கு யாரென்ருல், புல் லிதழ்கள் பாடிய புல்லனே!"

12. எமர்ஸன் பாராட்டு

போதுமா சன்மானம்? தான் அருமையாகப் பாடிப் போற்றி, மனித சமுதாயத்திற்குப் பயனுகும் என்றெண்ணி வெளியிட்ட நூலாசிரியன் உள்ளம் எப்படி யிருக்கும்? இருப்பினும் கீதை படித்த விட்மன், சுகதுக்கங்களையும், இகழ்ச்சி புகழ்ச்சிகளையும் பொருட்படுத்தாமல், அடக்கமாயிருந்து, மேன்மேலும் கவி பாடிவந்தான். உண்மைப் புலமையை யார் அணைபோட்டுத் தடுக்கமுடியும்? ஆந்தை கூச்சலிட்டுச் சூரியனைத் தடுக்கமுடியுமா?

அமெரிக்க ஞானிகளில் தோரோ (Thoreau) ஒருவன்; அவன் தனிமை-விரும்பி. அவன் 'புல் லிதழ்' களைப் படித்து, *"இது, பாதி கீதை;

* A mixture of the Bhagavat-Gita and the New York Herald: The author is a great fellow!.........His Poem (Leaves of Grass) is worth more than a thousand sermons."

பாதி 'நியூயார்க் ஹெரால்டு'; ஆசிரியர், பலே பேர்வழி! ஆயிரம் உபதேசங்களை விட, இப்புத்தகம் மேல்!"—என்றான்.

விட்மன் புலமையைச் சுவைத்து அதன் அருமை பெருமைகளைப் போற்றப் புலவனொரு வன் தோன்றினான்; அருட்புலவன்! அவன் 'புல்'லையும் பெருமை செய்யும் புலவன்! அவனே ரால்ஃப் வால்டோ எமர்ஸன்! புல் லிதழ்க் கவிகளைப் பன்முறை வியந்து படித்து, எமர்ஸன் விட்மனை நேசித்தான். இருவருக்கும் உள்ளார்ந்த நட்போங்கியது; இருவரும் புது யுகப் புலவர்; புதிய எண்ணங்களுக்கு அரசர். பொறாமைப் புலவரின் சொல்லம்புகளால் விட்மன் பட்ட புண்களைத் தீர்க்க வந்தான் எமர்ஸன்:

"பலர் பழித்தாலும், என் கண்ணை மறைக்க முடியாது. நான் "புல்லிதழை" வியந்து போற்றுகிறேன்! அஃது, அற்புத மான ஞானச் சுரங்கம். அமெரிக்கா, இப் படிப்பட்ட நூலை இதுகாறும் கண்டதில்லை! இந் நூலில் இணையற்ற புதுமை பொலி கிறது; படித்துப் பரவசமானேன்! நமது அமெரிக்காவுக்கு அற்புத மனிதனொருவன் பிறந்திருக்கிறான்! விட்மன் கவிதைகள் வருங்கால உலகை ஆளும்; அவை சுதந் தரக் கவிதைகள்; உள்ளத்தினின்றும்

இயல்பாக ஊறிப் பொசிந்த கவிதைகள்.
விட்மன் புகழ் உலகம் முழுதும் பரவிப்
பொலியும்."

என்று கூறி மகிழ்ந்தான்!

"பெருவாழ்வு தொடங்குகிறது; தங்களை வரவேற்கிறேன்; தங்கள் புகழ் உலகளாவும்!" என்று எமர்ஸன் விட்மனுக்கு எழுதினன். எமர்ஸனுடைய ஆசிமொழிகளை அட்டையிற் பொறித்து, விட்மன் மற்றொரு பதிப்பு வெளியிட்டான்; ஓராண்டில், ஐம்பதே நூல்கள் விற்றன. விட்மன், வயதில் முதிர முதிர, வாக்கும் முதிர்ந்தது; புகழும் பரவியது!

1860-ல் "புல்லிதழ்கள்" மூன்றும் பதிப்பு 154 கவிதைகளுடன் வெளிவந்தது. பின்னர், அதனைத் தொடர்ந்து அதன் மொழிபெயர்ப்புகள், இத்தாலியன், ஃப்ரெஞ்சு, ஜெர்மன், டச்சு முதலிய பாஷைகளில் வெளிவந்தன.

13. விட்மன் உபதேசம்

"ஆன்மவூற்றின் ஓட்டமே இன்பம். உன் ஆத்மாவை விட, கடவுட்டன்மையுள்ள கடவுள் வேறில்லை ("There is no God any more divine than your SELF"). கடவுட் கடிதங்களை நான் தெருவில் காண்கிறேன்; ஒவ்வொன்றிலும் அவன் கையெழுத்துள்ளது; என்னிடம் ஓர் இன்பப் பொருள் உள்ளது; அதை இன்னதென்றறியேன்; சொல்லவும் வாயிலேன்; அஃது என்றும் என்னுள் உள்ளது; நான் நானே; உள்ளபடி யுள்ளேன். உள்ளும் புறமும் நான் கடவுட்டன்மையேன்!

"மனிதா, எதற்கும் அஞ்சாதே! வலிய வெற்றிவீரன்போல, வாழ்வை மேற்கொள்; உண்மையும் திண்மையும் கரவிலாத் துணிவும் பெற்றோங்கு!

"பேரியல் ஆண்மையும், பேரியற் பெண்மையும் வாய்ந்ததே, பெருமை பெற்ற நகர

மாகும். பெண்மை, அன்பு, அழகு; ஆண்மை—ஆற்றல், செயல். இரண்டும் மாண்புடைத்தே; சரிநிகர் சமானமே!"

"I will make the most splendid race
the sun ever shone upon;
I will make divine magnetic lands,
with love of Comrades,
with the life-long love of Comrades;
O, Democracy, to serve you, ma femme!
For you, for you, I am trilling these
songs!"

—*(Song of Myself)*

"சூரியவொளி இதுவரையில் கண்டிராத
திவ்ய ஜாதியை நான் ஆக்குவேன்;
தோழர் அன்பால்,
ஆயுளெல்லாம் பிரியாத் தோழர் காதலால்,
தேவ காந்தம் வீசும் நாடுகளை ஆக்குவேன்;
ஓ, ஜனநாயகமே! நீ என் மனைவி; உனக்குப்
பணி செய்ய,
உனக்கே, உனக்கே இக் கவிகளை முழக்குகிறேன்!"

என்று சுதந்தர தாகமெடுத்துத் தன் புதுமைக் கவிகளை முழக்கினன், ஆத்ம ஞானி விட்மன்! தன் கொள்கைகளை மேடையேறிப் பிரசாரம் செய்ய அவன் முயன்றான். ஆனல், அவனுக்கும் மேடைக்கும் வெகுதூரம்; எண்ணம் பலிக்க வில்லை.

14. சுதந்தர உணர்ச்சி

தன் வாக்குகளைச் செயலிற் காட்டி, விட்மன் சுதந்தரப் பணிகளும் புரிந்தான். "அடிமை" என்ற சொல்லையும் அவன் பொறுக்க மாட்டான்; ஆடம்பரச் செல்வச் செருக்கையும் பொறுக்க மாட்டான். எளிய வாழ்வு, தூய வொழுக்கம், உயிர்க் கருணை, மௌனத் தியானம், அடக்கமான பொதுநலப்பணி-இவற்றை விட்மன் வற்புறுத்துவான். விட்மன், உயிரிரக்கமே வடிவானவன்; எவ்வுயிரையும் தன்னுயிர் போல மதிப்பவன். கொல்லா நெறியை எல்லாருக்கும் அவன் உபதேசித்தான். கொலையூண் உண்ணும் அந் நாட்டில், இக் கொள்கைகள் ஏறவில்லை. மனிதனை மனிதன் படுகொலை செய்யும் போர்களை அவன் அறவே வெறுத்தான். மனித சமுதாயம் முழுதும்

அன்புக் குலமாக ஒன்றுபட்டு வாழவே அவன் விரும்பினான்.

விட்மன் நண்பர் பலர்—புகழ்பெற்ற மேடை வீரர், அரசியல் தலைவர், புலவர், தோரோ எமர்ஸன் அல்காட் லிங்கன் எட்வேட் கார்ப் பெண்டர் போன்ற அறிஞர், பத்திராதிபர், இசைவாணர், கலைவாணர்—ஆவர். எனினும், அவன் ஏழைத் தொழிலாளிகளையே பெரிதும் நேசித்தான்; தச்சர், கொல்லர், வண்டிக்காரர், படகுக்காரர்—இவர்களுடன் ஒட்டுறவாகப் பழகித் தன் கொள்கைகளை அவர்களுக்கு உபதேசித்தான்; சமயத்தில் அவர்களுக்குக் கைகொடுத்தான். தொழிலில் அவனுக்கு ஊக்கமதிகம். 'வெறுங் கலை பயனில்லை; கர்ம வீரமும் சேர வேண்டும்' என்பது அவன் கொள்கை. ஒரு வண்டிக்காரன் நோயானால், விட்மன் அவன் வண்டியை ஓட்டுவான்; வாடகையை அவன் வீட்டிற்கே உதவுவான். அவ்வளவு பரிவு! தெருவிலும் வனத்திலும், ஆட்கள் அகத்திலும் முகத்திலும், பணியிலும், தொழிலிலும், அவன் கவிகளைக் கண்டான்!

விட்மன் தனது கொள்கையில் பிடிவாதமுடையவன்: ஒரு தரம், அவன் கன்கார்டில் (Concord) எமர்ஸன் விருந்தாளியா யிருந்தான். எமர்ஸனுக்குப் 'புல் லிதழி'ல் ஒரு பகுதி

பிடிக்கவில்லை; "இது, நல்ல பகுதிகளையும் கெடுக்கும்; நீக்கி விடுக!" என்றான். "நான் எழுதியது, என் அனுபவம்; ஒருவரிகூட நீக்க மாட்டேன்" என்றான் விட்மன்! "சரி, வாரும் சாப்பிடுவோம்" என்று எமர்ஸனும் சமாதானமாகப் போனான்!

15. கருணை வள்ளல்

இச் சமயமே, அமெரிக்காவில் அடிமைகளுக்கு விடுதலை தர முயன்ற லிங்கனை எதிர்த்துப் பெரிய உட்போர் கிளர்ந்தது. "ஐயோ, என் சகோதரர் இரத்தம் இப்படி வெள்ளமாய்ப் பெருகுகிறதே; இஃதென்ன கொடுமை, என்ன படுகொலை!" என்று விட்மன் மனமுடைந்து அழுதான்.* இக்கிழவன் சிந்தும் இரத்தக் கண்ணீரை யார் கவனிப்பர்? போர் வலுத்தது: விட்மனின் சகோதரன் ஜார்ஜ், 1862-ல் படையிற் சேர்ந்து ஃப்ரெடரிக்பர்க் (Frederickburg) போரில் காயமடைந்தான். சகோதரனுக்கு உதவி செய்ய விட்மன் சென்றான். போரில் வெட்டுண்டு, குத்துண்டு, சுடுபட்டுக் குவிந்து கிடக்கும் பிணங்களைக் கண்டு, விட்மன்

---

* இப் போரைப்பற்றி விட்மன் எழுதிய குறிப்புகளை "மாதிரி நாட்கள்" என்னும் பகுதியிற் காண்க.

கண்ணருவி பொழிந்தான். போரில் கை யிழந்தும், காலிழந்தும், கண்ணிழந்தும் புண் பட்ட வீரரைக் கண்டு, அவன் மனம் இளகியது. விட்மன் வாளெடுத்துப் போர்புரிய மறுத் தான். தலைவனொருவன் கீழ் அடங்கி நடப்பது அவனது சுதந்தரக் கனவுள்ளத்திற்கு வழக்க மில்லை. ஓராண்டு, விட்மன் வீட்டிலேயே சுகமா யிருந்தான்: "இன்றுடன் சாராயந் தொட மாட்டேன்: பாலும் நீருமே பருகுவேன்; ஊன், கொழுப்பு—இவை தொடமாட்டேன்; காய்கனி தானியங்களே உண்பேன்; உடம்பை உறுதியாக்கி இளம்பொலி வெய்துவேன்!" என்று, விட்மன் நண்பனொருவனுக்கு 16—4—1861-ல் எழுதினன். ஆனல், அடுத்த ஆண்டே, அவன் வாஷிங்டன் சென்று, காயம் பட்ட வீரருக்குச் சிகிச்சை செய்யும் தொண்டை மேற்கொண்டான். பையற் பருவத்தில் அவன் டாக்ட ரொருவரிடம் வேலை செய்து காயங் கட்டக் கற்றிருந்தான். அந்த அனுபவத்தைக் கொண்டு, அவன் காயப்பட்டவருக்குத் தன் னலான உதவி செய்தான்.

16. அன்புத் தொண்டு

தான் செய்த உதவிக்கு விட்மன் எவ்விதமான கைம்மாறும் பெற மறுத்தான். புத்தகம் விற்ற பணந்தான் விட்மனுக்குச் சீவாதாரம். அதில் தான் சிக்கனமாக வாழ்ந்துகொண்டு, மீதியை யெல்லாம் புண்பட்ட வீரருக்கே விட்மன் செலவிட்டான்; ஒவ்வொரு நாளும், தன் நீண்ட சட்டைப் பைகளிலும், தோட்பையிலும் கனிகளை நிரப்பிக் கொள்வான்; அழகான மலர்களை வாங்குவான்; கடிதங்கள் தபால்தலைகள் வாங்குவான்; காயப்பட்ட வீரர் கட்டிலருகே செல்வான்; புண்ணைக் கழுவி மருந்து கட்டுவான்; ஒவ்வொரு வீரனுக்கும் ஆறுதல் சொல்லி மலர் தருவான்; கனி தருவான்; அவன் வீட்டிற்கு ஏதாயினும் எழுத வேண்டுமானால், தானே எழுதித் தலையொட்டித் தபாலிற் போடுவான்; இனிய பாடல்களால் அவர்களை இன்புறுத்துவான்; தளர்ந்

தவரைத் தைரியப்படுத்துவான்; உடலியல்பைச் சொல்லி ஆத்மாவின் அமரத்தன்மையை விளக்குவான். தோல் வெளுப்பா கறுப்பா என்ற வேறுபாடின்றி, எச்சாதி எச்சமய மானாலும், எல்லாரையும் ஆத்ம சமானராகக் கருதி விட்மன் ஆறுதல் சொல்லுவான்: "புண்ணின் வேதனை எல்லாருக்கும் ஒன்று தானே! அதிலும் நிற வேறுபாடுண்டோ?" என்பான். வறிஞரிடம் அவன் உள்ளம் செல்லும். வருந்துவோர் வருத்தத்தைத் தனது வருத்த மென்றே விட்மன் உணர்வான். போர் வீரர்களைப் பற்றி விட்மன் பத்திரிகைகளுக்கு எழுதுவான். அவனை, "அன்புத் தெய்வம்; ஆறுதலளிக்கும் அப்பன்" என்று வீரர் வணங்கினர். நாளாக ஆக, தன் சகோதர மக்களுக்கு ஆறுதல் கூறுவதும், அன்புத் தொண்டு செய்வதும் விட்மனுக்குப் பெருமகிழ் வீந்தன. தன் உடலையும் உணவையுங்கூடக் கருதாமல், விட்மன் இரவு பகலாகச் சீவகாருண்யப் பணியில் ஈடுபட்டிருந்தான். அம்மை நோயாலும், கொடிய காய்ச்சலாலும் வருந்திய தோழர் பக்கத்திலிருந்து, விட்மன் வேண்டிய சிகிச்சை செய்தான். தன் உடல் நிலையை மதிக்காமல், அளவுக்கு மிஞ்சி இப் பணியில் உற்சாகங் கொண்டான், அந்தக் கர்மவீரன். அதன் பயனாக, அவன் உடல் தளர்ந்தது; அவனே நோயாளி யானான். தீராத சுரம்

அவனை வருத்தியது. அம்மை நோயாளரைத் தொட்டுச் சிகிச்சை செய்ததில், அவன் கை புண்ணுற்றது. நூல் விற்பனையும் அதிகமில்லை. "புல் லிதழ்கள்" வெளியிட்ட பதிப்பகத்திற்குப் பெருத்த நஷ்டம் வந்தது. உடல் நோயுடன், வறுமை நோயும் விட்மனை வாட்டியது.

17. போ் வெளியே!

ஏதாயினும் வேலை செய்துதான் விட்மன் இனிப் பிழைக்கவேண்டும். அச்சமயம் நண்பர் சிலர், "இந்தியன் பீரோ" என்னும் அலுவற்கூடத்தில், விட்மனுக்கு ஒரு குமாஸ்தா வேலை பண்ணி வைத்தனர். சில நாட்கள் விட்மன் அங்கே வேலை பார்த்தான். ஒரு நாள், அந்த அலுவற்கூடக் காரியதரிசி ஹார்லன் (Harlan), விட்மன் மேஜைமேல் "புல் லிதழ்கள்" புத்தகம் இருக்கக் கண்டான்; அப்புத்தகம் அவனுக்குப் பிடிக்கவே பிடிக்காது. துரையின் முகம் சிவந்து, கண் கனல் பொரிந்தது: "ஓகோ, நீ இந்த ஆபாசப் புத்தகம் எழுதிய புல்லனா? போ வெளியே, உடனே போ!" என்று முடுக்கினான். ஆ, விட்மன் மனம் அப்போது என்ன பாடு பட்டிருக்கும்! இச்செய்தி பத்திரிகையில் வெளிவந்தது. 'இந்தியன் பீரோக்காரர் செய்தது கொடுமை' என்று அறிவா

ளிகள் கண்டனம் எழுதினர். *ஓ கொன்னோர் (O'Connor) என்னும் அறிஞர், "நமது நல்ல கவிக் கிழவரையா இப்படி அவமானப் படுத்துவது?" என்று பெரிய கண்டனப் பிரசுரம் வெளியிட்டு, விட்மன் பெருமைகளை விளக்கினர். அன்று முதல் விட்மனுக்கு "நல்ல கவிக் கிழவர்" (Good Grey Poet) என்று பெயர் வந்தது. விட்மன் வாக்கையும், தூய வாழ்வையும், கருணையுள்ளத்தையும், அப்போது குடியரசுத் தலைவனயிருந்த ஆபிரஹாம் லிங்கன் அறிந்தான்; இந்தியன் பீரோக்காரர் செய்த கொடுமைக்காக நொந்து, விட்மனை மரியாதையாகப் போற்றி, 'அட்டோர்னி ஜெனரல்' காரியாலயத்தில் (Attorney General Office) ஒரு புதிய வேலை ஏற்படுத்திக் கொடுத்தான். இந்த வேலையில் விட்மனுக்குத் தகுந்த ஓய்வு கிடைத்தது. இரவில் நெடுநேரம் சிந்தனை செய்துகொண்டே, அவன் உலாவுவான்; காலையில் பேனப் பிடிப்பான்; 'புல் லிதழில் இன்னும் அரிய கவிகளைச் சேர்த்து, மறுபதிப்பிற்கு அதைத் தயாராக்கினன். "ஜன நாயகக் காட்சிகள்" (Democratic Vistas) என்ற மற்ரெரு வசன நூலை 1871-ல் எழுதி வெளியிட்டான். பிறகு! இந்தக் குமாஸ்தா வேலையும் விட்மனுக்கு நிலைக்கவில்லை.

---

* ஓ கொன்னோர்.—இவர், விட்மன் கவிகளைப் பிரசுரம் செய்த நண்பர்; அவன் குறைகளையும் கண்டிப்பவர்.

18. ஜில்க்ரிஸ்ட் (Gilchrist)

1873-ஆம் ஆண்டு, விட்மனுக்குப் பக்க வாதம்(Paralysis) கண்டது. வாதம் முதிர்ந்து நட மாட்டம் குறைந்தது. 18-மாதம் ஓய்வெடுத்துக் கொண்டு காட்மெனில் (Codmen) இருந்த தன் தாயிடம் சென்றான். தாயும் நோயாளுள்; மகன் முகம் பார்த்ததும், சாவு அவளை அழைத்துவிட்டது! இத்துயரமும் சேர்ந்தது; விட்மன் மூளையும், நரம்பும் தளர்ந்தன; 1874-ல் சர்க்கார் வேலையும் போய் விட்டது. மீண்டும் வறுமை அவனை வாட்டியது. சாவைப் பற்றியே அவன் கவி யெழுதினன்; இருப தாண்டுகள் சாவுடன் போராடினன்!

இச் சமயம், 'புல் விதழ்' க் காவியங்களுக் குச் சிறிது சுக்கிரதசை வந்தது! இங்கிலாந்தில் விற்பனைக்காகத் தன் நூலில் சில படிவங்களை விட்மன் அனுப்பினன்: "நமக்கொரு மனி தன் பிறந்தான்" என்று எமர்ஸன் சொன்ன

னன்றோ? அந்த மனிதனை (விட்மனை), இங்கிலாந்தே முதலில் அறிந்து வியந்தது! ஆங்கில அறிஞர் சிலர், அதன் அருமையைக் கண்டு மெச்சினர். 1889–ஆம் ஆண்டு **ஸைமண்ட்ஸ் (Symonds)** என்ற அறிஞர் புல் விதழ்களைப் படித்து, மனஞ் சிலிர்த்து, "பைபிளுக்கு அடுத்தபடி, என் வாழ்விற்கு மிகவும் பயனுனது புல் விதழே! அஃது, என் நரம்பிலும் எலும்பிலும் ஊறிப்போனது" என்று எழுதினர். **யார்க் பௌஸ்** என்பவர், "தங்கள் புல் விதழை நான் ஷேக்ஸ்பியருடனும், பைபிளுடனும் வைத்துப் படிக்கிறேன்" என்று எழுதினர். விட்மன், **டென்னிஸனை** வியப்பவன்: அந்தக் கவியரசன், விட்மனை, "**இவன், ஒரு மிகப் பெரிய கை!**" (" **A Great Big Something** ") என்று போற்றியது விட்மனுக்குப் பெரு மகிழ் வளித்தது! டென்னிஸன், ஓர்அன்புக் கடிதம் எழுதி விட்மனை இங்கிலாந்திற்கு அழைத்தான்: நோய்; மூதுமை; போகமுடியவில்லை. விட்மன் வறுமையால் வருந்துவதைக் கேட்ட ஆங்கில அன்பர், கொஞ்சம் பணம் வசூலித் தனுப்பினர். 'புல் விதழ்'க் கடைசிப் பதிப்பைப் பலர் வாங்கினர். **ரோசெட்டி (W. M. Rossetti)** என்னும் புலவர் மணி அந்நூலைப் படித்துப் பரவசமானுர்! விட்மனுக்கு நீண்ட புகழுரை எழுதி, அனுமதி பெற்றுப், புல் விதழ்களினின்று சில அரிய வாக்குகளைத் தேர்ந்தெடுத்து இங்கிலாந்தில்

அவர், புதியபதிப்பு வெளியிட்டார். இலண்டன் அறிஞர் அதைப் பிரியத்துடன் வாங்கினர்; தம்மவரைவிட, அந்நியர் நூலை நன்கு மதித்தனர்!

அப்போது, இலண்டனில் **ஆன் ஜில்க்ரிஸ்ட்** (Anne Gilchrist) என்ற பெண்மணியொருத்தி இருந்தாள்: அவள் நல்ல அறிவாளி; இலக்கியப் புலமை நிரம்ப வாய்ந்தவள்; புலவர் பலர் நட்பைப் பெற்றவள். ஜில்க்ரிஸ்ட் கணவனை இழந்தவள்; நான்கு குழந்தைகளுடன், இருப்பதை வைத்துக்கொண்டு, தனது துக்கத்தை மறந்து, இலக்கியப் பூங்காவில் உலவி வந்தாள்! அவள் 'புல் லிதழ்'களைப் படித்துப் பரவசமானாள்; 'அக் கவிகளைக் காதலித்தாள்!' என்றே சொல்ல வேண்டும்! அவள் அவற்றை நீளப் புகழ்ந்து ரோசெட்டிக்கு ஒரு கடிதம் எழுதினாள். அக் கடிதத்திலிருந்த குறிப்புகளை ரோசெட்டி விட்மனுக்கு எழுதியனுப்பினார். இச் சமயந்தான் அமெரிக்கப் புலவர் விட்மனின் நூலைச் சபித்து, வசைகூறிக் கூக்குரலிட்டதாகும். அவ்வசைகளை வீழ்த்திய ஆசீர்வாதப் பாட்டுப் போல, ரோசெட்டி—ஜில்க்ரிஸ்ட் மொழிகள் வந்தன. விட்மன் ஆறுதலுற்றான்; ஆன் ஜில்க்ரிஸ்டிற்கு நன்றி தெரிவித்துத் தனது உருவப் படத்தையும் கையெழுத்திட்டனுப்பினான். ஜில்க்ரிஸ்டின் மனம் விட்மனிடம் ஈடு

பட்டது. "தங்கள் கவிதையைப் பரவசத் துடன் படித்தேன்; என்னுன்மாவைப் பரமாத்மா தழுவிக்கொண்டதுபோ லுணர்ந் தேன்; அப்போதே காதல் என்பதை அறிந் தேன்; அன்பை அறிந்தேன்; அப்போதே நான் மாறிப்பிறந்தேன்; புதுவாழ்வு பெற் றேன்!" என்று ஆனந்தப் பரவசங்கொண்டு, விட்மனுக்கு ஓர் அன்புக் கடிதம் எழுதினுள் ஜில்க்ரிஸ்ட்! விட்மன், புகழையும் இகழையும் சமமாக மதிக்கும் ஞானியல்லனே? "அம் மையே, என்னைப்பற்றி அவ்வளவு பிரமாத மாக எண்ணி அன்பு வைக்க வேண்டா; நான் சாதாரண மனிதனே!" என்று விட்மன் அடக்கமாகப் பதில் எழுதினுன். ஜில்க்ரிஸ்ட் மேன்மேலும் பல புகழுரைகளை எழுதிவந் தாள்.

அந்நியர் புகழ்ந்த பிறகு, தம்மவரும் பின் பாட்டுப் பாடினர். "எங்கள் விட்மன், எங்கள் விட்மன்" என்று மார்தட்டினர்! அவனுக்கு ஒரு குதிரைவண்டியும் தந்தனர்!

விட்மன் நோயால் வருந்துவது நாடெங்குந் தெரிந்தது. செய்திகேட்ட ஜில்க்ரிஸ்ட், மனம் பதறி, 1876-ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு விரைந்து வந்தாள்; ஃபிலடெல்ஃபியாவில் ஒரு வீடமர்த்திக் கொண்டு, வால்ட் விட்மனை வந்து கண்டாள். விட்மன் உடம்பு சிறிது குணப்பட்

டது. ஜில்க்ரிஸ்டை அவன் மிகவும் வியந்து நேசித்தான். ஒவ்வொரு மாலேயும் நண்பருடன் அவ் விதுஷியைக் காணச்சென்று, அவள் செய்யும் உபசாரங்களே விட்மன் ஏற்பான்; அவள் மக்களுடன் அன்புறவாடிக் களிப்பான்; அவள் கலேயறிவையும் உண்மை யன்பையும் வியந்து போற்றுவான். இருவருக்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டது. விட்மன் வயது கொஞ்சம் குறைந்திருந்தால், அவள் அவனேயே மணம்புரிய மனந்துடித்தாள். தாடிநரைத்த தாத்தாவை எப்படி மணப்பது? ஜில்க்ரிஸ்ட் சிலகாலம் விட்மனுடனிருந்து, இலண்டனுக்குத் திரும்பிச் சென்ருள். அவள் மகன் ஹெர்பெர்ட்டு, விட்மன் திருவுருவை அழகாக எழுதினன். 1885-ஆம் ஆண்டு, ஆன் ஜில்க்ரிஸ்ட் காலமானள். "அந்தோ, என் கலேத்தோழி; என் சிறந்த சிநேகிதை!" என்று விட்மன் அவளேக் கவி பாடிப் புகழ்ந்தான்!

19. புதிய சக்திவாணன்

இறுதிக் காலத்தை விட்மன், இயற்கைத் தனிமையிலேயே அமைதியாகக் கழித்தான்: மாதிரி நாட்கள் (Specimen Days), நவம்பர் கொம்புகள் (November Boughs), குட் பை (Good Bye), மை ஃபான்ஸி (My Fancy) முதலிய நூல்களை எழுதினன். 'இந்தியாவே ஞான பூமி; சர்வ சமரஸ நிலையம்' என்பது விட்மன் எண்ணம்! அவன், இந்திய வழி (Passage to India), இரண்டு ஓடைகள் (Two Rivulets) முதலிய பாடல்களைச் சேர்த்து, 'புல் லிதழ்ப் புதிய பதிப்பு', ஒன்று வெளியிட்டான். இதில், 300 பவுன் ஆதாயம் வந்தது. இறப்பதற்கு இரண்டோராண்டுகளுக்கு முன்புதான், அவன் மேதையை அறிஞர் சிலர் நன்கறிந்து போற்றினர். வசைமாரியும் சிறிது குறைந்தது என்னலாம்.

இதுகாறும் யாப்பிற் கட்டுண்ட கவிதையை விட்மன் விடுவித்தான். கிரேக்கு

இலத்தீன் கவிதைகளைப் பின்பற்றியே, ஆங்கி லக் கவிகள் பாடினர்; ஹோமருக்கும் (Homer), தாந்தேக்கும் (Dante), விர்ஜிலுக்கும் (Virgil), அவர் கள் அடிமையா யிருந்தனர்; கிரேக்க-ரோம வீரர்தாம் அவர்களுக்குப் பிடித்தவர்கள்! இக் கட்டுப்பாடுகளை யெல்லாம் உடைத்துத் தள்ளிச் சாதாரண மனிதனைப் பாடினன் விட்மன்! பொது ஜனங்களின் வாழ்க்கையே அவன் இதயத்தில் துடித்தது. கவியுலகில் அவன் ஒரு புதிய சகாப்தத்தை உண்டுபண்ணினன். விட் மனைப் "**புதிய சக்திவாணன்**" என்று பலர் போற் றினர்! அவனைப் பின்பற்றிப் புகழோங்கிய கவிகள், இன்று பலர் உள்ளனர். வருங்காலக் கவிகளுக்கு விட்மன், சுதந்தர மணிவாசகம் அருளிச் சென்றான்:

> "இனிவரும் பாவலர்காள், பாடகர் காள், நாவலர்காள்! என்னை நீங்கள் ஒப்ப இது காலமில்லை; எனது இதயத்தை நீங்கள் இன்று அறியீர்கள்! புதுமைக் கவிகாள், சுதந்தர வீரக் கவிகாள், முற்காலக் கவிகளி னும் அரிய மகாகவிகாள், எழுந்திருங்கள்; வருங்காலத்தில் என்னை ஆமோதியுங்கள்!"

என்று கவிச் சுதந்தரத்துடன், விட்மன் சர்வ ஜன சுதந்தரத்தையும் விரும்பி, விடுதலை முழக்கம் செய்தான்.

> "தேச மகளீர், புதல்வீர்! முதியரா யினும், இளைஞராயினும், நீவிர் அனைவரும்

சரிநிகர் சமானராவீர்! பலப் பெருக்கம்,
அழகு, வளமை, உறுதி, திறமை, செல்வம்
—இவை பெற்று, அறமும், அன்பும், பூரண
சுதந்தரமும் ஓங்கி நீடூழி வாழுங்கள்!"

என்று மக்களை ஆசீர்வதிக்கிருன் விட்மன்!

விட்மன் காம்டனில் தன் தம்பியுடன் அமைதியாக இறுதி நாட்களைக் கழித்தான்: அரிய நண்பரைப் பார்ப்பது, உயர்ந்த விஷயங்களைப் பேசுவது, தன் கவிதைகளைப் படித்து விரித்துரைப்பது, டென்னிஸன் கவிமணிகளைப் பாராயணம் செய்வது, இயற்கை அழகைக் கண்டு மகிழ்ந்து தனியே யிருந்து, சிந்திப்பது, மலர்களையும் பாடும் புட்களையும் ஓடும் அருவிகளையும் கண்டு களிப்பது—இவையே அவன் வேலை! நண்பர் அவனது பிறந்த நாளைக் கொண்டாடினர்.

27—3—1892; அமெரிக்கப் பத்திரிகைகளில் ஒரு திடுக்கிடும் செய்தி:

"வால்ட் விட்மன்,
நமது 'நல்ல கவிக் கிழவர்'
இறந்தார்"

என்று வந்தது.

விட்மன் புதிய வாக்கினுல் புதிய கவிகளைப் படைத்தான். அவனது தீர்க்க தரிசனம் புதிய

ஜாதியைக் கண்டது; ஆண் பெண் சமத்துவத்தைக் கண்டது; சாதிமத பேதமில்லாமல், மனிதசமுதாயம் அனைத்தையும் ஒரே ஆத்ம சமானமாகக் கண்டது! அவன் புறவேடங்களைப் பாராட்டாமல், அன்பைப் பற்றி ஆன்ம ஒருமைப்பாட்டில், மாந்தரை வாழச் சொன்னான். அறிவு, அன்பு, ஆண்மை, அருள், வீர சுதந்தரம் ஆகிய இவற்றுடன் கூடிய புத்தம் புதிய மனிதரை, உள்விழியாற் கண்டு வருணித்த முதற் சுதந்தரக் கவி, வால்ட் விட்மனே!

கவிமணி ஷெல்லி சொல்லுகிறான்:

* "கவிதை தெய்விகமான ஒன்றே! அதுவே அறிவின் நடு, வட்டவரை; மற்றெல்லாக் கருத்து வகைகளின் வேரும், மலரும் அதுவே.

இன்பஞ் சிறந்த மேதாவிகளின் இன்பஞ் சிறந்த காலக் குறிப்பே கவி! உறங்கிக் குளிர்ந்து புதைந்து போன பண்டுருவிற்குப் புத்துயிரளிப்பது கவிதையே! கவிதையே, உலகில் அழகுமிக்க, சிறந்த பொருளுக்கு அமரத்தன்மை யளிக்கிறது!

---

* Poetry is indeed something divine. It is at once the centre and circumference of knowledge. It is at the same time the root and blossom of all other systems of thought.

Poetry is the record of the best and happiest moments of the happiest and best minds. Poetry reanimates the sleeping, the cold, the buried image of the past. Poetry thus makes immortal all that is best and most beautiful in the world.

கவிகள், பிறர் அறியமுடியாத அருளா வேசத்தை விளக்குவோர் ; நிகழ் காலத்திற் படிந்த, மகத்தான எதிர்காலச் சாயலின் கண்ணுடிகள். அங்கீகாரமின்றி, உலகிற்கு அறமளிப்போர் கவிகளே !"

இவ்வுண்மை விட்மனுக்கே சாலப் பொருந்தும் !

புதுக்கவி விட்மன் வாழ்க ! சுதந்தரக் கவிவாணன் வாழ்க !

* Poets are the hierophants of an unapprehended inspiration; the mirrors of the gigantic shadows which futurity casts upon the present. Poets are the unacknowledged legislators of the world."

—Shelley's DEFENCE OF POETRY

20. ஜனநாயகம் வேண்டும்

விட்மன், சுத்த சமரஸ சன்மார்க்கத்தையே பாடினன்; பேசினன். டெமொக்ராடிக் விஸ்டாஸ் (Democratic Vistas) என்னும் வசன காவியத்தில், அவன் தன் ஜனநாயகக் கொள்கைகளை விளக்கியிருக்கிருன்:

"தற்போது நமது சமுதாயம், பூச்சழகிலும், பேச்சழகிலும், வெளிப்பகட்டிலும், சுயநலப்போட்டி பொருமைகளிலும், பழைய உளுத்துப்போன வழக்கங்களிலும் மோகங்கொண்டு, உள்ளே லொடலொட்டையா யிருக்கிறது; இந்த நிலை மாறவேண்டும். திடமான குழந்தைகளைப் பெற, திடமான ஆண்பெண்கூட அரிதாயிருக்கிறது! நம் இலக்கியங்கள், வெறும் சொற்கோவைகளா யிருக்கின்றன! இலக்கியந்தான், ஒரு சமுதாயத்திற்கு எழுச்சி தருவது. அது, வாழ்வின் விளக்கமாய், உயி

ருடன் ஒட்டியொழுக வேண்டும்; இப்போதுள்ள நிலைமை அடியோடு மாற வேண்டும். இந்தப் போலி ஜனநாயகம் சுயநல நாயகந்தான்! அஃதொழிந்து, உண்மையான ஜனநாயகம் இனித்தான் உண்டாக வேண்டும்!

"உடலுறுதி, மனவுறுதி, சித்த விலாசம், ஆத்ம சுதந்தரம், விரிவான கலைப் பயிற்சி, பயனுள்ள தொழில் முயற்சி, தாராளமான நட்பு, ஈகை, ஒருவரையொருவர் கொள்ளையடிக்காத அன்யோன்யம், சாதிமதப் பிடிவாதங்களற்ற சுதந்தரமான நிமிர்ந்த நடை, செல்வச் செருக்கற்ற சரளமான உறவு — இவையே ஜனநாயகத்தின் அறிகுறிகள். ஜனநாயகம், பொருளைவிட **மனிதனை** உயர்வாக மதிக்க வேண்டும். சுருக்கமாகச் சொல்லின், ஜனநாயகம் இயற்கையோடியைந்த வாழ்வுதான்."

இவையே, விட்மன் எழுதிய ஜனநாயக தத்துவ விளக்கத்தின் சாரமாகும். கொள்கைக் கேற்றபடி விட்மன் செயலுமிருந்தது. "**The Specimen Days In America**" (மாதிரி நாட்கள்) என்ற நூலில், அது நன்கு விளங்குகிறது.

21. மாதிரி நாட்கள்

(Jottings from "THE SPECIMEN DAYS IN AMERCIA")

விட்மன், தனது தினசரி வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களை நாட்குறிப்புகளாக எழுதிவைத்தான். அவை, பல ஆண்டுகளில் எழுதப் பெற்றவை. அவற்றின் தொகுப்பே, பிற்காலம் "மாதிரி நாட்கள்" (Specimen Days in America) என்னும் நூலாக வெளிவந்தது. இந்நூல், ஒரே பொருளின் தொகுப்பன்று; பல்வகை நிகழ்ச்சிகளைப் பற்பல சமயங்களில் எழுதிச் சேர்த்தவை. *'மாதிரி நாட்கள் முறையான இலக்கியமன்று; ஆனால், அதன்கண் ஆழ்ந்த உணர்ச்சி உயிர்க்கிறது; அது வாழ்

---

* The "SPECIMEN DAYS" are hardly literature in the formal meaning of the word, but they breathe a profound sentiment; they give us a vivid look at one of the sides of life, and they make us acquainted with a man whom it is an honour to love.'—R. L. STEVENSON.

வின் ஒரு பக்கத்தை விளக்குகின்றது; நாம் பெருமையுடன் நேசிக்கத் தக்க ஒரு மனிதனை அறிமுகப் படுத்துகின்றது" என்கிறார் ஸ்டீவன்ஸன்.

இம் "மாதிரி நாட்கள்", இரு பகுதிகளை உடையது—(1) 1862 - 1865-ஆம் ஆண்டுகளில் எழுதிய போர்க் குறிப்புகள்; (2) 1877 - 1882-ஆம் வருஷங்களில் வரைந்த இயற்கைக் குறிப்புகள் (Nature Notes). முற்பகுதி, அக்காலம் அமெரிக்காவில் நடந்த போர் நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது: போரில் புண்பட்ட வீரருக்கு விட்மன் அன்புத் தொண்டு செய்தான். அக்காலமே, அவன் தான் கண்டது, கேட்டது செய்தது எல்லாம் குறித்து வைக்கத் தொடங்கினான். போர்ச் செய்திகள், செருக்கள வருணனை, படை யெழுச்சி, இராணுவ வைத்திய சாலையில் அவன் எய்திய அனுபவங்கள் போன்றவையெல்லாம், இதில் இனிய ஆவேச நடையில் மிளிர்கின்றன. பிற்பகுதியில், இயற்கையின் அதி அற்புத வருணனைகள்—இரவு, இளங்காலை, சந்திரோதயம், மாலைக் காட்சி, நீர் வீழ்ச்சி, சோலைக் காட்சிகள்—, இடையிடையே, விட்மன் பழகிய நண்பர், வர கவிகள் பலரின் அரிய தன்மைகள், பேரறிஞர் குறிப்புகள், அவர்தம் திருமொழிகள், மாந்தர் வாழும் வகை, இலக்கிய ரசனை முதலிய குறிப்புகள் பல அடங்கியுள்ளன.

இந்நூலின் பெரும் பகுதிகள், இந்த வரலாற்றில் ஆங்காங்கே எடுத்தாளப் பெற்றுள்ளன. ஆதலின், விட்மனின் நாட்குறிப்புகளில் வரும் சில சிறப்பான பகுதிகளை மட்டும் இங்கே குறிப்போம் :

1. போர்ச் செய்தி

இரவு; நியூயார்க் நகரம்; அரியதோர் இசை விருந்து; அதை அருந்தி நேரங் கழித்து வந்து கொண்டிருந்தேன்; வழியில் ஒரு பத்திரிகை வாங்கினேன்; ஒரு 'ஹோட்டல்' விளக்கில் விரித்துப் படித்தேன்; போர்ச் செய்தி கண்டேன். உரக்கப் படித்தேன்; எல்லாரும் கேட்டனர்; சுயேச்சாதிகாரஐரோப்பாத்தான் சண்டையிட்டு மண்டையுடைகிறது! அட, குடியரசு-அமெரிக்காவில் கூடவா போர்? என்ன செய்வது? ஜனங்களின் ஆத்திரம் எரிமலைப் பூகம்பம் போல் கிளம்புகிறது. 'அடிமை வியாபாரம் வேண்டா' என்று வடநாடுகள் உரிமைச் சங்கூதுகின்றன; 'அடிமைகளே வேண்டு'மென்று தென்னாடுகள் எதிர்க்கின்றன; ஒற்றுமை யில்லை. போர், போர், போர் மூண்டது! வாய்ப்போர் முற்றி, வாட்போரானது. என் மனம், போரில் புண்பட்ட வீரரிடம் சென்றது.

வைத்திய சாலையில் :

இராணுவ வைத்தியசாலை; அங்கு வண்டி வண்டியாகக் காயம்பட்டவர்கள் வந்து வந்து குவிந்தனர்; மலை மலையாகப் பிணங்கள், தலைகள், கால்கள், கைகள், முண்டங்கள் குவிந்தன; ஆ! அந்தக் கொடிய இரத்தக் காட்சி! உயிர் துடிப்பவருக்கு என் உள்ளந்துடிக்கும்: அவர்களுக்குக் கருணைக் கண்ணீர் வடித்தேன்; அன்பால், எழுத்தால், சொல்லால், கையால் இயன்றதெல்லாம் செய்தேன்.

செருக் களம் :

ஓர் இரவு; வெண்ணிலா பொழிகிறது! அதன் இன்பத்தைக் கெடுக்கப் போர்ப்பேய் தாண்டவ மாடியது. "வெட்டு, வெட்டு, நொறுக்கு, சுடு, சுடு" என்ற பயங்கரப் பல்லவி காதைத் துளைத்தது. அணி அணியாக வீரர் இரத்த வெள்ளத்தில் வீழ்கின்றனர். ஆ, பயங்கரம்! பயங்கரம்!......... அந்தோ, இதுவா மனித வுலகம்? இவர்களா வீரர்—இந்தக் கொலைகாரர்! ஐயோ, மனித வியல்பே, பரிதாபம்! இங்குமங்கும் உருக்குலைந்த வீரர் தரையில் கிடக்கின்றனர்; பசும்புல் இரத்தந் தோய்ந்திருக்கிறது! கொழுந்துப் பையன்கள், அதோ குண்டு பட்டுச் சுருண்டு கிடக்கின்றனர்! புல்லின் பசுமையும், நிலவின் வெண்மையும் சேர்ந்த அந்த அழகான

காட்சியை, மானிட வெம்மை, இரத்தம் பூசிக் கோரமாக்கியது! மனிதா, இந்த இரத்த வெறியாடலை என்னென்பேன்? இப் பயங்கர நாடகத்தை, எல்லையற்ற வானம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறதே!

* * *

2. இயற்கை வருணனைகள்

இரவு :

ஆ, நட்சத்திர இரவு! அது, நூல்கள், கலைகள், உபதேசங்கள் அனைத்தையுங் கடந்த பெருமை யுள்ளது; அதனுடன், மனங்கலந்த காலம், ஆத்மானுபவக் காலமாகும்! அஃது, எல்லையற்ற தெய்வ விளக்கம்! பால் வெளியைக் காண்கிறேன்! அது சத்தமில்லாத இசை விரிவாகக் காண்கிறது; சொல்லுக் கடங்காத சொரூபகானம்!

இயற்கை வாழ்வு :

என் நிறைவான நாட்கள், இயற்கையுடன் கூடிக் குழையும் நாட்களே! கவலைப் படும் மனிதா, வா; மனம், வயல், கடற்கரை—இவற்றில் அமைதிகாண்! இவை என்னைப் புதிய மனிதனாக்கின; தினம் இரண்டு மூன்று மணி நேரங்கள், இயற்கையுடன் தனித்திருக்கிறேன்; பேச்சு, புத்தகம், ஆடை, உலகநடை எதுவுமில்லை; சர்வ சுதந்தரனா யிருக்கிறேன்.

என் உடல் நலமுற்றது, எதனுல் தெரியுமா? மருந்து மூலிகை எதுவுமில்லை—திறந்த வெளியில் வசித்ததால், உடல் நலமுற்றேன்—இந்த மகத்தான இரகசியத்தை வாசகர் அறிக!

நான் இரவிக் கதிரிற் குளிக்கிறேன்: நானும் அம்மணம்; இயற்கையும் அம்மணம். உடை தொந்தரவா யிருக்கிறது. கண்ணுலும் கருத்தாலும் மட்டுமன்று, உடலாலும் இந்த இயற்கை யின்பத்தை நான் நுகர்கிறேன்; நாகரிகத்தின் உயரமும் அகலமும் இந்த இன்பத்தின் ஒரு துளியே!

இளங் காலை:

ஆ, என் ஆத்மாவுக்கும், இளங் காலைக்கும் எவ்வளவு உள்ளுறவு! கிழக்கின் அழகைப் பார்! வட்டச் சுடர் எழுந்தது; கவிதைக் கேற்ற காட்சி! இதைவிட நிறைவான, அருட் பொலிவான, உண்மையான, நுண்மையான, இனிமையான காட்சி எங்கே யிருக்கிறது? எல்லா நாடுகளுக்கும், நாட்டினருக்கும், காலங்களுக்கும் இந்தக் கிழக்கே (East) நலமளிக்கிறது. எட்டாத் தொலையிலிருந்தும், அஃது அன்புடன் கிட்ட வந்து, நம் புலன்களைத் தொட்டு நலமளிக்கிறது. ஆ, கிழக்கு! அங்கே தான், ஆசிய (Asia)ப் பொழில்கள் உள்ளன. அவையே பாட்டின் தாயகம்;

சரித்திரத்தின் பிறப்பிடம். கிழக்கு—புராதனக் கிழக்கு — ஒவ்வொரு காலையும், ரோஜாவைப்போற் புதுமை பொலிகிறது!

சந்திரன் :

ஆ, சந்திரன் மேகத்தில் மூழ்கி மூழ்கி, வானில் நீந்தி நீந்திச் செல்கிறது. கவிதையும் இலக்கியமும் அறியாத தனிச் சிறப்பொன்று அதனிடம் காண்கிறது! " சந்திரன், பார்வைக்குச் சலிப்புத் தட்டுவதில்லை; அஃது, அழகுத் தேவதை! ஒரு பெண்ணைப் போல், அது தனக்காகத் தன் இரகசியத்தை மறைத்து வைக்கிறது. திடீரென்று முழுப் பொலிவுடன் ஒரு நாள் தோன்றி, மறு நாள் மெல்ல மெல்லத் தன் அழகை மறைத்துக் கொள்கிறது. கவிகளையும், கலைவாணரையும், காதலரையும், அது தன்னிடம் வணங்கி மயங்கச் செய்கிறது! "தன் காதலர் வியந்து போற்றி ஆவலாகத் தொடரும் போதும், தனது பெண்மை—இரகசியத்தை, யாருக்கும் புலனாகாமல் தனக்காக மறைக்கும் வித்தை, அதற்குத்தான் தெரியும்!" என்று ஒரு புலவர் எழுதுவது மிகவுஞ் சரி!

* * *

மீனும் மதியும் மிளிரும் இரவில், எனக்குத் தாராளமாகப் பாட்டும் கவிதையும் உதிக்கின்றன!

3. நண்பர்கள்

ஞானி எமர்ஸன் (EMERSON) :

சுகமான நாள்; போஸ்டனிலிருந்து கன்கார்டு சென்றேன்—40 நிமிஷப் பிரயாணம்; எமர்ஸனைப் பார்த்தேன்; அவர் உற்சாகமாயிருந்தார்: முகத்தில் நல்ல களை; ஒள்ளிய விழிகள்; இனிய புன்னகை; நிதான நடை; அறிவுச் சுடரினின்று பொலியும் திருமொழிகள்—இவையே எமர்ஸன்! அவர், மிக மரியாதையாகப் பேசினார்: இரண்டொரு வார்த்தை—ஒரு புன்னகை—பிறகு மௌனம்—இவற்றால், அவர் பேசுவோர் உள்ளத்தில் தன் கருத்தைப் பதியச் செய்கிறார். அவர் பல துறை யறிஞர்; வசீகரமான சன்மார்க்கி; உள்ளதை உள்ளபடி ஓங்கி யுரைக்கும் தைரிய சாலி; கொள்கையைக் கடைப் பிடிக்கும் உதாரண புருஷர். அவர், இரண்டொரு வார்த்தையிலும் பதில் சொல்லுவார்; சமயம் வந்தால், வீராவேச நடையிலும் அறிவைப் பொழிவார்! அவர், அப்படிப் பேசும் போது, நான் குறுக்கே பேசுவதில்லை; கருத்துடன் கேட்டுக் கொண்டிருப்பேன்.

ஆபிரஹாம் லிங்கன் (ABRAHAM LINCOLN) :

பத்திரிகைகளில் லிங்கன் கொலையுண்ட செய்தி கேட்டுத் திடுக்கிட்டு வருந்தினேன்; மனந் தளர்ந்தேன். அவர், அமெரிக்க மணி; அன்புள்ள கனவான், அறிவாளி,

இரசிகர், புண்ணியர், சன்மார்க்கி, வீரர், கருணையுரு, மனச் சாட்சியை மதித்து நடப்பவர், நேர்மையாளர். உரிமை, ஒற்றுமை— இரண்டிற்கும் அவர் உயிரைக் கொடுத்து உழைத்தார். அவர் தியாகி; அவர் சாவும் தியாகப் பொலிவுடையது. உலக சரித்திரத்தில் அவர் பெயர் என்றும் பொலியும். அவர், நமது குடியரசிற்கு ஒளியளித்தார்: அவர் சென்றார்; குடியரசிருக்கிறது! அலை எழும், விழும்; கடல் என்றுமுள்ளது! தலைவர் வருவர், செல்வர்; தேசம் என்றுமிருக்கும்! ஆபிரஹாம் வாழ்க்கை தேசத்துடன் என்றும் ஐக்கியமாய் விட்டது...... இந்த மனிதரொருவர் இறந்தது, நாடெல்லாம் விரிச்சென்றிருக்கிறது. நமது நாட்டிற் சிறந்த மனிதர் லிங்கனே!

* * *

கார்லைல் (Carlyle):

இவர் ஓர் அபூர்வ சக்தி வாய்ந்தவர்: ஜனங்களிடையே பரவியுள்ள தீய குணங்களையும், சமூக ஊழல்களையும், அரசியல் அமைப்பில் நேர்ந்துள்ள இடர்களையும், புயல் நடையில் விறுவிறுப்புடன் எழுதுவார். பிரெஞ்சுப் புரட்சி (French Revolution) என்ற தமது நூலிலும் இக் குறைகளையே எடுத்துக் காட்டுகிறார். தமது அனுபவத்துடன் எதையும் நேரில் கண்டு அறிந்து எழுதினல், குறைகளை விலக்கவும் வழி

சொல்ல வேண்டு மன்றோ? வியாதியை அறிந்தவன், அதை ஒழிக்கவும் மருந்து சொல்ல வேண்டும். சமூகத்தையும் அரசியல் அமைப்பையும் குறைகூறும் ஒருவன், அவற்றைத் திருத்தி யமைக்க வழி சொல்லா விட்டால், அவனது நூலின் பயனென்ன? கார்லைல் பேனா, வெளியே உள்ள ஊழல்களை எப்படி விலக்கலாம் என்பதைப் பற்றி ஒன்றும் எழுதாமல் உறங்கியது; வாழ்க்கையின் அம்சங்களைக் கார்லைல் நன்றாய் அனுபவித்தறியவில்லை. வீண் உபதேசத்தால், பயனற்ற வறண்ட வியாக்கியானத்தால், என்ன பயன்? சொற் சித்திர ஜாலத்தில், இலக்கிய விமர்சனத்தில், உலகம் தன் ஊழல்களைப் போக்க முடியுமா? நூலும் வியாதியும் சேர்ந்து விரியுமே யொழிய, சீர் திருத்தம் பிறக்குமா? அரசியல் ஊழல்கள் ஒழிய, அனுபவச் சீர்திருத்தமன்றோ வேண்டும்? வேதாந்தம், வாழ்க்கையை ஒட்டியன்றோ ஓடவேண்டும்? கார்லைல் எவ்விதப் புதுத் திட்டத்தையும் உருவாக்கி விடவில்லை.

பீதோவன் (Beethoven):

இசையருட் புலவன்: கானத்தின் ஆழத்தைக் கண்டறிந்தவன். இசை, இதயத்தினின்று இசைக் கருவியிற் பாய்கிறது. அவனது இசை யோவியம் சொல்

லில் அடங்காத எல்லையற்ற சக்தி வாய்ந்தது: குன்றின்மேல் சூரியன் ஜ்வலிக்கும் போது, இயற்கையே ஆனந்தப் பரவசங் கொண்டு களிநடம் புரிவதுபோல், இசை வெள்ளம் அவனது இன்பத்தை வாரிக் கொட்டுகிறது. காட்டில் இசைக்கடல் ஒலிப்பதுபோல், அவனது கான வெள்ளம், அலை யோவியமாகக் குதித்தெழுந்து குமுறிக் கொண்டு வருகிறது. ஆனந்தத்தின் பல மனோநிலைகளையும் அவனது இசை உள்ளத்தில் நாம் எதிரொலிக்கக் காணலாம். மௌனத்தின் உச்சியில், இசைப் புயல் வீசும்போது, நான் பரவசமடைகிறேன். இதுவே நாதப் பிரமம்.

64-ஆம் வயது :

[*31—5—1882*-ல், விட்மன் ஜெர்மன் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு எழுதுகிறார் :]

"எனக்கு 64-ஆம் வயது பிறந்தது. என் உடல் இளைத்தாலும், தெம்பு குறையவில்லை.......திறந்த வெளியில், காற்றோட வசிக்கிறேன். என் உடல் உழைத்தது; பெருத்தது — நிறை 190-பவுண்டு. இன்னும் நான் வாழ்க்கை, மாந்தர், உலக முன்னேற்றம், கால நடப்பு—இவற்றைக் குறித்து ஆராய்கிறேன்; அறிகிறேன்; சுறுசுறுப்பாகவே இருக்கிறேன். என் நினைப்பு தெளிவாயிருக்கிறது. கொள்கை

பிசகவில்லை; நினைவு தடுமாறவில்லை. என் வாழ்வின் முதன்மையான எண்ணம் நிறைவேறி விட்டது. எனக்கு மிகவும் அன்புள்ள, உண்மையுள்ள நண்பரும் உறவினரும் இருக்கின்றனர்—பகைவரைப் பற்றி, நான் கவலைப்படுவதே யில்லை.

இலக்கியப் பசி :

இலக்கியப் பசி என்னை விடவில்லை. என் பையில் ஏதாவது நல்ல நூல்களை எப்போதும் நான் வைத்திருப்பேன்; திருப்பித் திருப்பிப் படிப்பேன். எனினும், இயற்கை தான் என் உரைகல். அதில், எல்லா நூல்களையும் பதம் பார்ப்பேன். அகராதி, இலக்கணம் வைத்து இலக்கியங்களை நான் அளவிடுவதில்லை: காடும் மலையும், கதிரும் கடலும், நம் நூல்களை நிதானிக்கின்றன! உடலைக் கடந்த உள்ளான்மா, 'இஃது இப்படி' என்று தீர்மானிக்கிறது.

தெய்விகக் கடமை :

இயற்கையுடன் இணங்கிய உற்சாகமான அன்பு வாழ்க்கையே நல்லொழுக்கம். வேறுபட்ட நோய் வாழ்விநின்று, இயற்கையுடன் ஒன்றுபட்ட தெய்விக வாழ்விற்கு மனிதரைத் திருப்பவேண்டும். இதுவே, நாவலர், பாவலர், சமயாசாரியர் கடமையாகும்! இதுவே, என் வாழ்வும், தவமுமாகும்!

* * *

22. எனது பாடல் (Song of Myself) *

விட்மன் பாடல்களில்; அவனைப்பற்றியே கூறும் கவிகள், "எ-ன-து பா-ட-ல்" என்ற தலைப்பில் வந்துள்ளன. அவற்றுள் ஆவேச பரவசத்துடன் அவன், வாழ்வின், சமுதாயத்தின், மனிதனின் ஒவ்வோர் அணுவையும் புள்ளி போட்டுச் சொல்லி 'இஃது இப்படி இருக்கவேண்டும்' என்று காட்டுகிறான்; தானே அப்படி யிருந்து காட்டி ஆனந்தக் கூத்தாடுகிறான்! அவன் தரும் புள்ளி விபரங்களைச் சொல்லுவதானால், இச்சிறு நூல் மிகப் பெருகும். பொதுவாக அவன், "எனது பாட" லில் (Song of Myself) சொல்லுவதை இங்கே குறிக்கிறேன்:

மேலும், நமது பாரத நாட்டு மகர்ஷிகள் கண்ட வேதாந்தஞானமே, அவன் உள்ளத்தில்

குறிப்பு: * இப்பாடலே, விட்மனின் ஆத்மானந்தக் கவிதைச் சிகரமாகும். வேதோபநிஷத்துக்களின் சாரமனைத்தும் இப் பாடலில் விளங்கும்.

உதயமானது ! ஞானம் எங்குதித்தால் என்ன ? அதை நாம் நன்கு மதிக்க வேண்டியது தானே? உபநிஷத்துக்களையும், தாயுமானவரையும் எவ்வளவு ஆர்வமுடன் படிக்கின்றோமோ, அவ்வளவு ஆர்வமுடன், எமர்ஸன், விட்மன், பைபிள் முதலிய நூல்களையும் நாம் சுவைத்தறிய வேண்டும். ஆ, அன்பீர் ! விட்மனின் வெள்ளையுள்ளம் எப்படிக் களங்கமற்றுப் பேசுகிறது எனப் பாருங்கள் :

“ நான் என்னைக் கொண்டாடுகிறேன்; என்னையே பாடுகிறேன்; என் உரிமை, ஒருமை, உங்களுக்கும் உண்டு. ஏனெனில் நானே நீங்கள் ; நம் பெற்றோரே, அவர் பெற்றோர்; எல்லோரும் ஒரே மண்ணிலே தான் பிறந்து வாழ்கிறோம், மறைகிறோம் !..............எனக்கு வயதாயிற்று ; ஆயினும், திடமா யிருக்கிறேன் ; சாகு மட்டும் திடமாயிருப்பேன் ! வகுப்புவாத வாடை என் அருகேயும் வீசக் கூடாது ; நான் திறந்த பேர்வழி ; மூடமந்திரங்களை வெறுப்பவன். எனக்கு ஒளிவு மறைவு, பிகு மதிப்புக் கிடையா.

நான், காடுமலைகளில், ஏரிக்கரையில், களிப்புடன் கட்டில்லாமல் உல்லாசமாகப் பாடியாடி ஓடித்திரிவேன் ! ஓரேயிடத்திற் குந்தியிருக்க எனக்குப் பிடிக்காது. நான் இயற்கையின் மடியில் பிறந்த மேனிக்குத்

தனித்திருப்பேன். செடிகொடிகளின் வேர், இலை, பூ, காய், கனி, விதை, நரம்பு, விலங்குகளின் இயற்கை, சேர்க்கை, வாழ்க்கை எல்லாவற்றையும் அக்கறையாக நான் கவனிப்பேன்; காற்றின் சலசலப்பு, அலைகளின் கும்மாளம், முழுமதியின் முத்து நிலா, இவற்றைக் கண்டு பரவசப்படுவேன்!.........

நண்பா, வா; என்னுடன் இரவில் தனியே இருந்து பார்; கல்வியும் கவியும் எங்கிருந்து வருகின்றன என்பதையறிவாய். நூலறிவு சப்பென்று போகும்; இதோ, எனது கண்ணால், மனத்தால் அனுபவிக்கும் இயற்கை அறிவை, நீயே கண்டுணர்! நான் தத்துவ விவகாரத்தையும், உலகின் ஆதியந்த விவகாரத்தையும் பேசிக் காலம் போக்க மாட்டேன்; இதோ, இப்போதிருக்கும் உலகே, காலமே, பருவமே, எனக்கு உண்மை; நான் இப்போதும், எப்போதும் இளவழகன்; பூரணன்! சுவர்க்க நரகப் பேச்சும் எனக்கில்லை. எனதான்மா என்றும் இனியது; தெள்ளியது; ஒள்ளியது. தோன்றாத ஆன்மாவைப் போலவே, நான் தோன்றும் உடலையும் உலகையும் நேசிக்கிறேன். சத்தும், அசத்தும் எனக்கு உண்மையே; ஒன்றின்றி மற்றொன்றில்லை. ஒன்றையே பிடிவாதமாகப் பேசி, மற்றொன்றை மறுப்பதை நான்

வெறுக்கிறேன். அப்படிப் பேச்சளப் போருக்கு நான் பதிற் சொல்லமாட்டேன். இதோ, குளிக்கப்போய் என் உடலையும் ஆத்மாவையும் வியந்துகொண்டே ஏரியில் நீஞ்சுகிறேன். எந்த உறுப்பையும் நான் வெறுக்கமாட்டேன்; எல்லா உறுப்புக் களையும் சுத்தமாகவும் உறுதியாகவும் வைத் திருப்பேன். அதோ, ஆண்களும் பெண் களும் நீரை வாரியிறைத்துத் துள்ளி விளை யாடுகிறார்கள். ஆ......ஹா......!

எல்லாரிடமும் எனக்குப் பரம திருப்தி; எல்லாரையும் நான் சமமாகக் கண்டு மகிழ் வேன்! ஊர் வம்பர், "ஐயா, உமது ஊர், பேர், படிப்பு, இளம்பருவ வாழ்வு, காதல், உடை, உணவு, சொத்து, சுகம் — இவற் றைக் குறித்துச் சொல்லும்" என்று கேட் பர். இவை வந்து செல்வன; நான் இந்த விவகாரங்களைக் கடந்தவன். நான் அத் தகையோரிடம் வாதாடுவதில்லை; நகை யாடுவதில்லை; பகையாடுவதில்லை. எல்லா விவகாரங்களையும் சாட்சியாகக் கண்டு, அவற்றை என்னுள் நிலவும் சர்வேச்வர னுக்கே நிவேதிப்பேன்! எனக்கு வார்த்தை புளித்தது; அமைதி இனித்தது! உரை கடந்த அமைதி என்னை உட்கொண்டது. உலகிலுள்ள ஆண்பெண் அடங்கலையும் நான் ஆத்மசமானராகக் கருதுகிறேன். நான் 'தொப்பி—ஜோட்டில்' (Hat & Boot)

அடங்கவில்லை. இறப்பும் பிறப்பும் எனக்கில்லை; எதற்கும் இறப்பில்லை; அழிவில்லை. உலகீர்......இறந்தவர்களுக்காக அழுகிறீர்களா? சை.........வேண்டா! அவர்கள் வேறோரிடத்தில் நன்று யிருக்கிறார்கள்! இறந்தது, இன்னொரு வடிவில் பிறந்து வாழும்; இறப்பும் பிறப்பும் எனக்குச் சரிதான். எல்லாரும் சரிநிகர் சமானரே!

நான் இரவில் காடுமலைகளில் தனித்திருப்பேன்; தீ மூட்டி உணவைப் பக்குவமாக்கி யுண்டு, இலைகளைப் பரப்பிப் படுப்பேன். ஆகாயத்தின்கீழ்த் திறந்த வாழ்வு வாழ்வது, ஆ......ஹா!...... எத்துணை இன்பம்! காலையில் விருட்டென்றெழுந்து, படகோட்டிகளுடன் படகிற் செல்வேன்; சுற்றியுள்ள தொழிலாளருடன் தொழிலாளியாக வேலை செய்வேன்; பழகுவேன். அதோ, ஏழை நாடோடி யொருவன் களைத்துப் போய் உட்கார்ந்திருக்கிறான்! 'தம்பீ, வா!' என்று அவனை வீட்டிற்கு அழைத்து வருகிறேன்; குளிக்கச்சொல்லி, புதிய உடுப்புத் தந்து, பக்கத்தில் அமர்த்தி, சாப்பிடச் சொல்லி, ஒரு வாரம் அன்பாக வைத்திருந்து, அவனை அனுப்புகிறேன்! நீக்ரோ வொருவன் குதிரை பிடித்துச் செல்லுகிறான்; அவனது திண்ணிய உடலைக்கண்டு வியக்கிறேன்! 'சபாஷ், சிங்கக்குட்டி!' என்கிறேன்! நான் காணும் எவரையும், சந்திக்

காமல் விடுவதில்லை; அவரிடங்கண்ட இயற்கைக் குணாதிசயங்களைப் பாட்டில் புகுத்தாமலும் விடுவதில்லை. நான் எல்லாருடனும் ஐக்கியப் பட்டுள்ளேன்; கொல்லர் குறி தவறாமல் சம்மட்டி அடிப்பதைப் பார்த்து நிற்பேன்; தொழிலாளர் தொழில் வேகம் என்னை மகிழ்விக்கும்! நான் வண்டியோட்டும்போது மாட்டுடன், குதிரையுடன் பேசுவேன். அச்சுப் புத்தகங்களைவிட, இயற்கையுலகே எனக்கு இனிது! பறவைகள் பயிற்சியில்லாமலே எவ்வளவு இனிமையாகப் பாடுகின்றன! ஆ...ஹா!...பறவைப் பாட்டு, பேரின்பப் பரவசமன்றோ?

நான் மண்ணில் காலை யூன்றியதும், உள்ளத்தில் ஆயிரம் வாஞ்சைகள் பிறக்கின்றன; நெற்றி வேர்வை சொட்டச் சொட்டப் பாடுபடும் பாட்டாளிகள்; அதோ, ஓங்காரத்துடன் இராட்டினம் சுழற்றும் பெண்கள்; கலியாணச் சடங்கிற்கு அலங்கார ஒய்யாரத்துடன் செல்லும் காதல் ஜோடிகள்; அரங்கத்தில் களியாட்டமாடும் ஆண்பெண்கள்; கட்டுமஸ்தான வாலிபர்; தோளோடு தோள் அணைத்துச் செல்லும் நண்பர்; பருவப் பயிர் செய்யும் குடியானவர்; குடியரசை நிர்வகிக்கும் ஜனத் தலைவர் - இவர்கள் எல்லாரிடமும் எனக்குப் பேரன்புண்டு. நான் எல்லாரையும் என்னவராகக் கருதுகிறேன். நான் கிழவன்;

வாலிபன்; தாய்; தந்தை; குழந்தை! நான் உலக சமுதாயத்தில் ஒருவன்; தனிச்செருக்கில்லாத வெள்ளைப் பேர்வழி. நான் எல்லாருடனும் கைகோத்து உல்லாசமாகச் செல்வேன். நான் ஆகாசத்தை உதவி கேட்டுக் கைதொழுவதில்லை; உழைப்பினுல்பிழைத்து, எவர் பொருளையும் அபகரிக்காமல், உள்ளதைக் கொடுத்து வாழ்வேன்; நான் மனித சமுதாயத் தோழன்; கைகுலுக்குவோரெல்லாரும் எனக்கு ஒட்டுறவான நண்பரே. நான் புலவரிடம் கற்பதில்லை; மிகமிக எளியவரிடமே கற்பேன். கற்றதைப் பெரிய அறிவாளிகளுக்குப் போதிப்பேன். நான் நித்திய மாணவன்; அனுபவக் கிழவன். சூரியன், அதனிடத்திலிருந்தே உலகைச் சித்திரிக்கிறது. நான் என்னிடத்திலிருந்தே எங்கும், எல்லாமா யிருப்பேன். நீரும் நிலமும் இருக்குமிடமெல்லாம் புல் வளர்கிறது. எல்லா விடங்களிலும் காற்று தாராளமாக உலாவுகிறது. நானும் அப்படியே, எங்கும் எல்லாரிடமும் தாராளமாக உள்ளத்தை விட்டுப்பேசி, ஒட்டுறவாயிருப்பேன். ஏழை செல்வன், புண்ணியன் பாபி, பத்தினி பரத்தை, ஆண்டான் அடிமை என்ற வேறுபாடு எனக்கில்லை. எல்லாரையும் எனது விருந்திற்கு அழைக்கிறேன்; சந்தோஷமாக வாருங்கள்! எல்லாரையும் கைவிரித்துத் தழுவி அன்புடன் வரவேற்கிறேன். என் உதடுகள்

எல்லாரையும் கொஞ்சும். என் மார்பு எல்லாரையும் தழுவிக்கொள்ளும். என் உள்ளத்தில் எல்லார் உள்ளமும் பிரதிபலிக்கும். நான் எல்லார் உள்ளத்திலும் ஐக்கியமாயுள்ளேன். பருவ மழைபோல், நான் எல்லாருக்கும் உதவுவேன்.

நான் பலமாகப் பாடுகிறேன்; முரசடித்துப் பாடுகிறேன்! யாருக்கு? வென்றவருக்கா? இல்லை, இல்லை; வீழ்ந்தவருக்கு! தோற்றவருக்கு! வீழ்ந்தவர் வாழ்க! மூழ்கிய கப்பலில் மூழ்கியோர் வாழ்க! ஹுரா! சாவை நான் வாழ்த்துகிறேன்! சாவே, நீ வாழிய! ஊழிதோறூழி வாழிய!

மனிதரெல்லாரும் எனக்கு ஒன்றே; மனிதன் யார்? நீ யார்? நான் யார்? நீ யாரோ, அவனே நான்; நானுரோ, அவனே நீ, அவன், எல்லாம்! யாருக்கு நான் அஞ்சவேண்டும்? வீட்டுக்குள்ளும் வெளியிலும் எனது தொப்பியை எப்படி வேண்டுமானுலும் வைத்துக்கொள்வேன். யார் என்னைக் கேட்பது? நான் எதற்கும் அழேன்; வருந்தேன். உலகே, நீ அழுவதேன்? நான் எதையுந் தொழேன்; சடங்கும் தொழுகையும் எனக்கில்லை. நான் அணுவணுவாக என்னை ஆராய்ந்தறிந்தவன். நான் நானே! நான் அமரன்; அகாலன்; தொல்லையில்லாத சுதந்தரன்! எங்

தக் குருக்களிடம் நான் மன்னிப்புக் கேட்கவேண்டும்? நான் மோட்சந் தேட வில்லை; இருக்குமிடத்தில் இருக்கிறபடி இருக்கிறேன். பிறர் என்னை என்னவேண்டு மானாலும் நினைக்கட்டும். பிறருக்கு நான் கட்டுப்பட மாட்டேன். எனக்குத் தெரிந்த உலகம் ஒன்றே; அஃது, அகண்ட வுலகி னும் பெரிய வுலகம்! அது நான், நானே!

நான் சர்வாத்ம சமரஸக் கவி: நான், யாக்கை ஆன்மா இரண்டையும், ஆண்மை பெண்மை இரண்டையும், தாய் தந்தை இரு வரையும் சிறப்பித்துப் பாடுகிறேன். நல்லது பொல்லது, பகை நட்பு ஆகிய இருவிகாரங் களிடையே நான் ஒரு விகாரமும் இல்லா திருக்கிறேன். நான், சத்து அசத்து, ஆத்மிகம் பௌதிகம்—இரண்டையும் ஒப்பு கிறேன். 'ஸயன்ஸிற்கு' (Science) 'சபாஷ்' போடுகிறேன்! பூத - வேதி - கணித - யந்திர நிபுணர்களே......... வாஹ்வா!.........உங்க ளுக்கு என் மரியாதை! நான் **வால்ட் விட்மன்!** நான் உண்டுறங்கிச் சாதாரண மனிதன் போல் இருக்கிறேன், காண் கிறேன் என்று நினையாதீர்கள்! பூட்டை யுடைத்துக் கதவைத் திறந்து பாருங்கள்: நான் ஓர் உலகம்; எல்லாம் நானே; எல்லா ரும் நானே! எல்லார் உள்ளமும் என்னுள் பேசுகிறது; என் உள்ளம் எல்லார் உள்ளத் திலும் துடிதுடிக்கிறது. 'சர்ச்சி'னும்

'பைபிளி'னும் (Church and Bible) என் தலை பெரிது! எனது குரல், கடல் கடந்து செல்லுகிறது. நாவினல் நான் ஞாலத்தை அளக்கிறேன்; காலத்தை அளக்கிறேன்! நீங்கள் உலகத்தை அளக்கலாம்; ஆனல், என் உள்ளத்தை அளக்கவே முடியாது! பேச்சாலும், எழுத்தாலும், என்னை நீங்கள் அறியவே முடியாது! மருத்துவன் கத்தி என் உள்ளுண்மையை எட்டாது; அதை, எதுவும் ஒளிக்காது; அழிக்காது!

நான் மனிதரைமட்டுந்தான் நேசிக்கிறேன் என்று நினைக்கிறீர்களா? நான் விலங்குகளையும் நேசிக்கிறேன். பசுபட்சிகள் எதற்கெடுத்தாலும் முணுமுணுப்பதில்லை; பாபத்திற்காக அழுவதில்லை; யாரையுந் தொழுவதில்லை; கடவுளையுங் குருக்களையும் பற்றிப் பேசி என் காதைத் துளைப்பதில்லை; 'இல்லை' யென்ற கவலை யில்லை; சேர்த்துப் பூட்டும் பைத்தியமில்லை; ஒன்று மற்றொன்றைத் தாள்பணிவதில்லை; முன்னேருக்கும் பணிவதில்லை; சடங்கு சங்கடங்கள் இல்லை! என் கொள்கை அவற்றுடன் எப்படிப் பொருந்தி யிருக்கின்றது பாருங்கள்! அவற்றின் உடல் இயற்கையில் வளர்ந்து, எவ்வளவு திடவுறுதியா யிருக்கின்றது! அவை 'ஆஸ்பத்திரி' யில்லாமலே சுகமா யிருக்கின்றன! அவை என் உடன்பிறப்பு; அவற்றை நேசிக்கிறேன். விலங்குகள் வாழ்க!

நான் உலகையும் மனிதவியல்பையும் நுனித்துக் காண்கிறேன்; தோழர் தோளில் கைபோட்டுக்கொண்டு, தெருத்தெருவாகச் சுற்றித் திரிகிறேன்; தொழிற்சாலைகளை யெல்லாம் உற்றுப் பார்க்கிறேன்; 'ஆஹா, அப்படியா,' என்று எல்லார் பேச்சையும் கேட்கிறேன்! எனக்குக் கட்டில்லை; காவலில்லை; சட்டதிட்டமில்லை. யாரைப் பார்த்தாலும், அவருள் யான் புகுந்து கொள்வேன். பிறர் புண்ணுனல், நான் புண்ணுவேன்; பிறர் மகிழ்ந்தால், நான் மகிழ்வேன். கைதியுடன் நானே சிறை வருந்துவேன்; விடுதலை பெற்றவர்களுடன் நானே விடுதலை பெறுவேன். வீழ்ந்தவருடன் வீழ்வேன்; வென்றவருடன் வெல்வேன். 'நீ யார்?' என்று எவரையும் நான் கேட்டதில்லை. 'நான் யார்?' என்றறிந்தால், அந்தக்கேள்வி யேன்? நான் நோயாளிக்கு மருந்து தருவேன். திடசரீரியை, 'சபாஷ் சிங்கம், அப்படியே உறுதியாயிரு!' என்று மெச்சுவேன்! உலகையும் பெரியாரையும் நான் உள்ளத்தால் அளந்து பார்க்கிறேன். யகோவா, ஏசுநாதர், புத்தர், அல்லா—இன்னும் கிரேக்க ரோம எகிப்திய இந்திய தீர்க்க தரிசிகள், கடவுளர் எல்லாரையும் நான் அளந்து படிவமெடுத்து மதிப்பிட்டு வைத்திருக்கிறேன். அவர்களுடைய திருவாக்குகளை நான் மறுக்கவில்லை. ஆனல், எனக்கு அற்புதங்களில் நம்பிக்கையில்லை.

கப்பலிலும் நீராவி யந்திரத்திலும் வேலை செய்யும் பையன்களைப்போலே, நான் பழைய கால ஐதிகக் கடவுளரை மதிக்கிறேன். எனக்குப் பீடம்,சர்ச்சு எதுவுமில்லை. நான் திறந்த பாதையில் ஆண் பெண் இருவரையும் கைகோத்தழைத்துச் செல்கிறேன். எனக்கு முன்னேற்றமே யொழியப் பின்னேற்றமே இல்லை ! என் வார்த்தை புத்தகத்திலிருந்து வருவதன்று ; எனது புத்+அகத்திலிருந்தே (புதிய - உள்ளத்திலிருந்தே) வருவது.

அதிகாலையில் குன்றிலேறி வானைப் பார்த்தேன் ! ஆ, அங்கே மிளிரும் சுடர்களில் எத்தனை ஞானச்செல்வம் குவிந்து கிடக்கிறது ! 'அதை மனத்தில் அடைந்தாலே மகிழ்வு' என்றேன் ! என் அந்தராத்மா, 'அத்துடன் மகிழ்ந்து போகாதே ; அதைக்காட்டிலும் பெரிய ஞானச்சுரங்கம் உன்னுள் உள்ளது !' என்றது. உண்மை ! நான் எல்லாச் சமயங்களையும் போற்றுகிறேன் ; அவற்றின் சாரத்தை ஏத்துகிறேன் ; இந்து வேதியருடன் கோயில் வழிபாட்டிற்குதவுகிறேன்; அவதூதருடன் காட்டில் நிர்வாணமாகத் திரிகிறேன் ; வேதம் கேட்கிறேன் ; பைபிள் படிக்கிறேன் ; குரான் ஓதுகிறேன் ! ஆனல், எத்தனை நூல்களைக் கற்றென்ன ? திருப்தியுண்டா ? எனது ஆத்மவிகாசத்திற்கே

நான் காத்திருக்கிறேன்! அதுவே இன்பம்! ஆத்ம ஞானத்துடன், நான் கம்பீரமாக நிமிர்ந்து நிற்பேன்!

சோகமோக தாகங்களில் சிக்கித் தவிக்கும் ஜனங்களைக் கண்டு இரங்கு கிறேன்: வாருங்கள் குழந்தைகளா, ஆண் பெண் அடங்கலும் வாருங்கள்! சந்தோஷமா யிருங்கள்! உங்களுக்குள் குமுறும் கவலைக் கடலை, துயரத் தொல்லைகளை, அவ நம்பிக்கைச் சனியன்களை நான் அறிவேன்; இவற்றை ஒழியுங்கள்! உங்களுள் அமராத்மா உள்ளது; விசனமேன்? எனது ஜீவப் படகைக் காலவெள்ளத்தில் ஆனந் தாத்மா ஓட்டுகிறது! எனக்காக நட்சத் திரங்கள் விண்ணில் இடம்போட்டு வைத் திருக்கின்றன! நான் சோனியல்லேன்; பயில்வான்களுக்குப் பயில்வான், ஆசான்! மனவிசாலங்கொண்டு வாருங்கள் என் னுடன்; விசனப் பேயை விரட்டியடியுங் கள்!

'ஆத்மா, ஆத்மா' என்று, நான் பேசுகிறேன்; கேள்வி கேட்டால் எனக் குச் சொல்லத் தெரியாது; நீங்களே அந்தப் பொருளை உங்களுள் கண்டு மகிழவேண் டும்! அது, காட்டும் பொருளன்று; சொல் லாற் சுட்டும் பொருளன்று!

மனிதா நீ, நீண்ட பகற்கனவில் உன்னை மறந்தாய். இதோ, உன் கண்ணைத் துடைக்கிறேன்! உன்னைப் பார்த்துக் கொள்! சும்மா உட்காராதே! சுறுசுறுப்பா யிரு; முன்னுக்கு முன்செல்! என்மொழி முக்காலும் உண்மை. அதை உபாத்தியாயர் மூலம் அறிய மாட்டாய். என் கருத்தறிந் தவன், திறந்த வெளியில் வெளிப்படையாக வசிப்பான்; இயற்கையின் தனிமையில் அமர்ந்து, என் கருத்தை அறிவான். மனிதா, இப்போது நீ என்னை அறிவது கடினம்; இருந்தாலும் பரவாயில்லை. உனக்கு மங் களம்! ஏ மனித சமுதாயமே, உனக்காக ஓரிடத்தில் காத்திருக்கிறேன்!"

* * *

ஆ, இவை எவ்வளவு ஆழ்ந்தமொழிகள்! "புல் லிதழ்கள்" முழுதும், அப்படியே உள் ளாழ்ந்து உலகிற்குப் பெருந்துணிவும் ஒளியும் நல்கும் மணிவாக்குகளாகும்! கிழக்கு முனிவர் (Eastern Saints) வாக்குகளைப் போலவே, இத் தகைய மேற்கு முனிவர் (Western Saints) வாக்குகளையும் நாம் போற்ற வேண்டும். நம் முனிவரே, அங்கே போய்ப் பிறந்திருக்கக் கூடாதா?

சக்தி ஓம் சக்தி